REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) ESTABLISHED 19 FEB. 1876

# பாதுகாவலன்

PATHUKAVALN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் 125
இதழ் 13
01 ஐப்பசி 2001
பக்கங்கள் 8
விலை ரூ. 5

# உலக சமாதானத்துக்காக சகல மதத்தவரும் ஒன்றுபட வேண்டும்

## திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர்

**உலக சமாதானத்துக்காக சகல மதத்தவரும் ஒன்றுபட வேண்டும் என மத்திய ஆசியக் குடியரசான தஜிகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்ட திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் அங்கு பல்லாயிரக்கணக்கானோர் கூடியிருந்த பிரார்த்தனை நிகழ்வொன்றிலே இந்த வேண்டுகோளை விடுத்தார்.**



அமெரிக்காவில் நடத்தப்பட்ட கொடுமை உலகில் பிளவுகளை மேலும் ஆழப்படுத்துகின்ற செயல்களுக்கு நம்மை இட்டுச்செல்லக் கூடாது என்று கூறிய திருத்தந்தை மேலும் கூறுகையில் இஸ்லாமிய மதத்துக்கு கத்தோலிக்க திருச்சபை பெரும் மதிப்பளிக்கிறது. பேதங்களுக்கோ வன்முறைகளுக்கோ வெறுப்புகளுக்கோ இடமளிக்காது சகல மதத்தவரும் உலக சமாதானத்துக்காக ஒன்றுபட வேண்டும். தந்தையான ஒரே கடவுள் தந்த அழகான உலகமிது. வன்முறைக் கலாச்சாரத்தை அன்று அன்பின் கலாச்சாரத்தையே இங்கு உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆப்கானிஸ்தான் எல்லையோரம் அமைந்துள்ள தஜிகிஸ்தானில் திருத்தந்தையின் விஜயம் முடியும்வரை ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட மாட்டாது என்று அமெரிக்க நிர்வாகம் உறுதியளித்திருந்தது.

தனது மக்களை கொரில்லாக்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்காக அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகளை ஏற்றுக்கொண்டாலும் வன்முறைகளற்ற முறைகளே சிறந்தது என்று வத்திக்கான் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மதத்தலைவர்கள் முன்வந்து எமது சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டும்

மனித ஆளின் மகத்துவம் பாதுகாக்கப்படல், சகல மனிதரதும் உரிமைகள் உறுதிசெய்யப்படல் ஆகிய கருத்துக்களை முன்வைத்து கடந்த ஆகஸ்ட் 26ஆம் திகதி ஹட்டனில் ஒரு ஊர்வலம் இடம்பெற்றது. மலையகத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களுக்கு கண்டனம் தெரிவிப்பதே இந்த ஊர்வலத்தின் நோக்கமாகும். ஹட்டன், தலவாக்கொல்லை, பொகவந்தாலாவ, மஸ்கெலியா போன்ற இடங்களிலிருந்து 600க்கு மேற்பட்ட மக்கள் இதில் கலந்துகொண்டனர். பல கத்தோலிக்க குருமார்களும் பௌத்த பிக்குகளும் இதில் கலந்துகொண்டனர். தலவாக்கொல்லையில் இடம்பெற்ற மாணவர்களின் தற்கொலை, சீதா என்னும் மாணவி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டமை ஆகியவற்றை சுட்டிக்காட்டிய அருள்தந்தை ஜோர்ஜ் சிகாமணி நீதி வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கை என்று கூறினார்.

மகாகல்கடவள புண்ணிய சார தேரோ பேசுகையில் ''மதத்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## யாழ். மறைமாவட்டத்தில்

# இறைதியான இல்ல தியானங்கள்

இறைவனின் திருவருளால் இறைமக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த இறை தியான இல்ல தியானங்கள் (Divine Centre) ஆரம்பமாகியுள்ளன. இந்தியாவிலுள்ள முரிங்கூர் என்னுமிடத்தில் இறை அனுபவத்திற்கு இட்டுச் செல்லும் வழிகாட்டிகள் எம் மத்தியில் வந்துள்ளார்கள்.

குருக்கள் துறவிகளுக்கு செப். 27 வியாழன் மாலை 6 மணி முதல் ஒக். 2 செவ்வாய் வரை குருக்களுக்கான தியானம், ஆயர் இல்லத்திலும் ஒக்.2 முதல் ஒக்.5 வரை அருட்சகோதரிகளுக்கும் 2 குழுக்களாக நடைபெறும் எனவும்,

இறைமக்களுக்கான தியானங்கள் செப். 29 சனி மாலை 4 முதல் 7 வரை – மரியன்னை பேராலயத்திலும், செப். 30 ஞாயிறு மாலை 4 முதல் 7 வரை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும், ஒக். 5 வெள்ளி மாலை 4 முதல் 7 வரை – மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திலும், ஒக். 6 சனி காலை 8 முதல் 12 வரை – பண்டத்தரிப்பு பத்திமா அன்னை ஆலயத்திலும், ஒக் 6 சனி மாலை 3 முதல் 6 வரை – சின்னமடுவிலும், ஒக். 7 ஞாயிறு காலை 9 முதல் மாலை 5 வரை தும்பளையிலும் இடம்பெறும் எனவும்,

இளைஞர், யுவதிகளுக்கு ஒக். 2 (போயாதினம்) காலை 10 முதல் மாலை 5 வரை – யாழ். மரியன்னை பேராலயத்திலும், பக்திச் சபையினர், மறையாசிரியர்களுக்கு ஒக். 11 வியாழன் காலை 9 முதல் 12 வரையும் நடைபெறும் எனவும்,

பொதுவான குணமாக்கல் வழிபாடுகள் ஒக். 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெறும் எனவும் யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்

தென்பகுதியில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதென கத்தோலிக்க ஆயர் பேரவை தீர்மானித்துள்ளது. இதன் பொருட்டு செபம்ரெம்பர் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதிலுமுள்ள சகல ஆலயங்களிலும் திருப்பலியின்போது இதற்கென விசேட நிதி சேகரிக்கப்பட்டு காலி, பதுளை ஆயர்களினுடாக நிவாரணம் வழங்கும் நிறுவனங்களிடம் மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாகப் போதிய மழையின்மையால் கடும்வரட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் பயிர்ச்செய்கை முற்றும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களின் குடிநீர் பற்றாக்குறையை நீக்குவதற்கு பவுசர்களில் நீர் விநியோகிக்கப்படுகிறது. விவசாயத்தை முற்றாகக் கைவிட வேண்டியிருப்பதால் மக்கள் தொழிலின்றி வருவாயின்றி அல்லற்படுகின்றனர். இந்நிலையில் பலவித நோய்களும் பரவலாமென அஞ்சப்படுகின்றது.

# நீண்டகாலம் இலங்கையில் பணிபுரிந்த

# அருள்தந்தை பியோ சாம்போ காலமானார்

ஏறத்தாழ 33 ஆண்டுகள் இலங்கையில் பணிபுரிந்த இயேசு சபைக் குருவான அருள்தந்தை பியோ சாம்பா கடந்த யூலை 18ஆம் திகதி இத்தாலியில் ஒரு மோட்டார் விபத்தில் காலமானார். 1950களில் இலங்கைக்கு வந்த பிதா சாம்போ பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர் மத்தியில் பணிபுரிந்தார். அம் மக்களிடம் சகல விதத்திலும் அவர் காட்டி வந்த கரிசனை காரணமாக ''தோட்டத் தொழிலாளரின் காந்தி'' என்று அவர்கள் அவரை அழைத்தனர். ஒரு சமயம் அவர் நடுச்சாமம் வரை வீதியில் காத்திருந்து ஒரு தமிழ்க் குடும்பத்தை சிங்களக் காடையரிடமிருந்து பாதுகாத்தார். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர் அஞ்சாது குரல் கொடுத்தமை கண்டு அரசு 1983ல் அவரது விசாவைப் புதுப்பிக்க மறுத்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## உலக ஆயர் பேரவைக்கு ஆயர் கோமிஸ்

இவ்வருடம் ஒக்டோபரில் ரோமாபுரியில் நடைபெற இருக்கும் ஆயர் பேரவையின் 10வது கூட்டத்தில் பங்குபற்றுபவர்களென திருத்தந்தையால் நியமிக்கப்பட்ட 32 ஆயர்களுள் ஆயர் ஒஸ்வால்ட் கோமிஸும் ஒருவாராவார்.

இக் கூட்டத்தில் உலகின் எல்லா நாடுகளிலிருந்தும் அந் நாடுகளின் ஆயர் பேரவைகளினால் தெரிவுசெய்யப்பட்டவர்களும், திருத்தந்தையால் ஐந்து கண்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும் பங்குபற்றுவர்.

தற்போது ஆயர் கோமிஸ் இலங்கை ஆயர் பேரவையின் தலைவராகவும், ஆசிய ஆயர் பேரவைகளது கூட்டிணைப்பின் பொதுச் செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

## இன ஒற்றுமையைப் பேண

# சமாதான தூதுவர்கள்

அண்மையில் பிலியந்தலையிலுள்ள சுபோதி நிறுவனத்தில் இனங்களுக்கிடையில் சமாதானத்தைப் பேணும் தூதுவர் குழு ஆரம்பித்து வைக்கப்பட்டது. சர்வதேச சமாதானக் குழுக்களைச் சேர்ந்த வெளிநாட்டவர் இலங்கையில் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பது போல இக் குழுவினரும் செயற்படுவர். முதன்முதலாக தமிழ், முஸ்லீம் இளைஞர் அடங்கிய குழு பத்தேகமவிலும், சிங்கள இளைஞர் குழு மட்டக்களப்பிலும் 3 வாரம் பணி செய்து திரும்பியுள்ளன.

இப் பணிக்கு முன்வரும் இளைஞர்களுக்கு 10 நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த இளைஞர்களை தமது வீட்டில் ஏற்க முன்வந்த குடும்பங்களுக்கும் தேவையான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. இளைஞர்கள் இக் குடும்பங்களோடு நட்புறவு கொண்டது மட்டுமல்லாமல் [illegible] கிராம மக்களையும் அறிந்து அவர்களோடு நல்லுறவு கொள்ள முடிந்தது.

இத் திட்டம் வெற்றியளித்தால் நாட்டின் பிற பாகங்களுக்கும் தூதுவரை அனுப்ப சுபோதி ஆலோசித்துள்ளது.

நாட்டில் அரசியல் ரீதியான ஒரு தீர்வு ஏற்பட்டாலும் மக்களின் நேர்முக சந்திப்பினால் ஏற்படும் நல்லுறவுதான் அதை நிலைக்கச் செய்யும் என சுபோதி நம்புகின்றது.

## செடெக்கிற்கு புதிய இயக்குநர்

செடெக் நிறுவனத்துக்கு புதிய அதிபராக அருள்தந்தை டேமியன் பெர்ணான்டோ நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 6 ஆண்டுகளுக்கு மேலாக அதன் இயக்குநராகப் பணிபுரிந்த அருட்தந்தை ஜே.பி. தேவராஜா செப்ரெம்பர் 3ஆம் திகதி அப் பதவியிலிருந்து விலகினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து
### வன்முறை வன்முறையையே தோற்றுவிக்கும்

முழுஉலகமுமே அதிர்ச்சியில் உறைந்துபோன சம்பவம் 11.09.2001அன்று அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமாகும். 1941ஆம் ஆண்டு உலகப் போரின்போது அமெரிக்காவின் பேர்ள் துறைமுகத்தின் மீது யப்பான் நடத்திய தாக்குதலின் பின் இந்த வன்முறைச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

*'அமெரிக்காவின் கழுத்தில் வைக்கப்பட்ட கத்தி'* என்று வர்ணிக்கப்படும் இச்சம்பவம் பொதுமக்கள் மீதே இலக்குவைத்து நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

வல்லரசுகளும் அவை கொண்டுள்ள இராணுவப் பலங்களும் தற்கொலைப் போர் முயற்சிகளின் முன் தவிடுபொடியாகிவிடும். உயிராயுதத்தின் முன் அணுஆயுதம் கூட பலமற்றது என்ற உண்மை உணர்த்தப்பட்டுள்ளது.

உலகின் ஒரே வல்லரசான அமெரிக்கா செய்வதறியாது திகைத்து நிற்கிறது.

உலகின் மூன்றாவது மிக உயர்ந்த கட்டிடமான உலகப் புகழ்பெற்ற இரட்டை அடுக்குமாடிக் கோபுரங்கள் மண்குவியலாகியுள்ளன. அமெரிக்காவின் பொருளாதார மையம் அதிர்ந்து வீழ்ந்து போயுள்ளது.

உலகின் இராணுவ அதிகாரி அமெரிக்காவின் இராணுவத் தலைமையகம் பென்டகன் தகர்க்கப்பட்டிருக்கிறது.

உலகம் முழுவதிலும் போராட்டத்தையும் போர் முயற்சிகளையும் ஊக்குவித்தும் வளர்த்துவிட்டும் வந்த நாடுகள் என்ன விலை கொடுத்தும் எத்தனை உயிரைப் பறித்தும் அவற்றை இப்போ அழிக்கத் துணிந்துவிட்டன.

மனித உயிர்களை இலக்குவைத்து நிகழ்த்தப்பட்ட இந்நிகழ்வில் அழிக்கப்பட்ட மனித உயிர்களின் தொகை இன்னும் முடிவாகவில்லை இந்நிலையில் ஒரு உலக யுத்தம் மூளப் போகிறதா? ஒரு தனி மனிதனை அழிக்க ஒரு போர் ஆரம்பமாகிறதா?

இந்தப்பல எண்ணக்கருக்களின் மத்தியில் நம் நிலைப்பாடுதான் என்ன?

வன்முறை வன்முறையையே தோற்றுவிக்கும். வாள் எடுத்தவன் வாளாலே மடிவான் என்ற யேசுவின் வார்த்தைகள் கிறிஸ்தவர்களின் அடிப்படைச் சிந்தனையாக இருக்கவேண்டும்.

நீதியும் நியாயமும் நீதி நியாயமான வழிமுறைகளால் பெறப்பட இறுதிவரை முயலவேண்டும்.

தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதற்கான விதிமுறைகளும் வழிமுறைகளும் அங்கிகரிக்கப்பட்டதாயிருக்க வேண்டும்.

எந்த சரியான நோக்கமாக இருந்தாலும் பொதுமக்களை இலக்குவைப்பதும் அழிப்பதும் அதில் இலாபம் தேடுவதும் சர்வதேச மனிதாபிமான உணர்வுகளுக்கும் சட்டங்களுக்கும் முரணானவை. அவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை.

எதுவுமே அறியாத அப்பாவி மக்களை அழிப்பதால் எந்த இலாபமும் இல்லை. அவை அவர்களின் வல்லமையற்ற நிலையையே வெளிக்கொணர்கின்றன. எந்த நியாயப்படுத்தப்பட்ட நிகழ்வும் எந்த அப்பாவிக்கும் தீங்குவிழைக்காமல் நிகழ்த்தப்படுவது முக்கியமானது.

# மனிதரைப் பிடிக்க உன்னையும் அழைக்கின்றாரா?

## நீயும் அ.ம.தி ஆகலாம்

இலங்கைத் திருச்சபை வரலாற்றில் 150 ஆண்டு பணி நிறைவைக் கொண்டாடி, பணி வாழ்வில் பல பரிமாணங்களைத் தன்னகத்தே கொண்டு வீறுநடையுடன் திகழ்கின்றது அமலமரித் தியாகிகள் சபை. உலகில் ஏறக்குறைய 65 நாடுகளில் தனது பணித்தளங்களைக் கொண்டுள்ள இச் சபை இன்னும் பல புதிய பணித்தளங்களை விரிவுபடுத்தவுள்ளது.

## வித்திட்ட விதை

''உங்களுக்குள் அன்பு... அன்பு... அன்பு செய்யுங்கள். வெளியில் மக்களின் மீட்புக்காக ஆர்வத்துடன் உழையுங்கள்'' வித்திட்டவரின் முத்தான இறுதி வார்த்தைகள் இவை. வெற்று வார்த்தைகளா? இல்லை, வாழ்ந்து பார்க்கப்பட்ட, ஒவ்வொரு அ.ம.தியும் வாழ்ந்து பார்க்க வேண்டிய வார்த்தைகள். பிரான்சு தேசத்தில் ஏக்ஸ் –அன்–புறவான்ஸ் என்ற பட்டணத்தில் பிரபு வம்சத்தில் 1782ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 1ஆம் நாள் பிறந்த இயூஜின் டீ மசனெட் என்பவர் தான் அ.ம.திகளின் சபை நிறுவுனர். 1995ஆம் ஆண்டு மார்கழி மாதம் 3ஆம் திகதி திருச்சபையால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். 1815 ''புறொவான்சில்'' மறைபரப்பாளர் சபை என சுதேச குருக்கள் சிலரோடு ஆரம்பித்த இச்சபை 1826 மாசி மாதம் 17ஆம் திகதி திருச்சபையால் அமலமரித் தியாகிகள் சபை என்ற பெயரோடு அங்கீகரிக்கப்பட்டது.

**தேவஅழைத்தல் இயக்குனர்**
**எஸ்.ஏ. பொன்சியன் அ.ம.தி**
**புனித பத்திரிசியார் கல்லூரி**

## இந்து சமுத்திரத்தின் சரித்திரத்தில்...

யாழ். மறைமாவட்ட அன்றைய ஆயர் பெற்றாக்கினி மார்சேயின் (பிரான்ஸ்) ஆயராக இருந்த இயூஜின் டீ மசனெட்டைச் சந்தித்து ''வறிய மக்களின் மீட்புக்கு மறைபரப்பாளர்களைக் கொடுங்கள். ஆண்டவன் பெயரால் கொடுங்கள்'', என்று இரந்து வேண்டினார். வறியோர் என்றவுடன் வைரம் நிறைந்த ஆயரின் நெஞ்சு இளகியது. ஏழைகள் பால் அவருக்கு அவ்வளவு இரக்கம், அனுதாபம், அன்பு ''உங்களுக்கு உடனே குருக்கள் கிடைப்பார்கள்'', என்ற இயூஜினின் உறுதிமொழியின் பயனாக அருள்திரு செமோரியாவின் தலைமையில் 1848ஆம் ஆண்டு மாசி மாதம் 4ஆம் திகதி அ.ம.திகள் இலங்கையில் காலடி பதித்தார்கள். காலத்தால் அழியாத பல சின்னங்களையும், நினைவுகளையும் அ.ம.திகள் இலங்கை மண்ணில் பதித்துள்ளனர். சுதேச குருக்களின் உருவாக்கம் கல்விப் பணி, பங்குப் பணி, சமூகப் பணி, மறை அறிவுப் பணி என அவர்கள் பணி விரிவடைந்தது. குருமடங்கள், ஆலயங்கள், கல்லூரிகள், பதிப்பகம் இவைபோன்ற பல காலத்தால் அழியாத நினைவுச் சின்னங்கள், அ.ம.திகளின் பெயர் சொல்லி நிற்கின்றன. யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, திருகோணமலை மறை மாவட்டங்களின் ஆரம்பகால உருவாக்கத்திற்கு அ.ம.திகள் ஆற்றிய பணி சிறப்பானது.

## இன்று அ.ம.திகள் பணி

**உருவாக்கம்**

* புனித வளனார் ஆரம்பக் குருமடம், யாழ்ப்பாணம்
* ஆரம்ப நவசன்னியாசம் – மக்கோனா
* நவசன்னியாசம் – பண்டாரவளை
* அ.ம.திகள் பெரிய குருமடம், அம்பிட்டியா (தத்துவயியல்)
* யாழ். புனித டீ மசனெட் பெரிய குருமடம் (இறையியல்)



**மறையுரை**

* மறை உரைஞர் குழு வவுனியாவைத் தளமாகக் கொண்டு இலங்கை முழுவதும் சேவையாற்றுகின்றனர்.

**பங்குப் பணிகள்**

* திருநெல்வேலி அமதிபுரம் – யாழ். மறைமாவட்டம்
* பேசாலை, தச்சனாமருதமடு, மடு (மரியாள் திருப்பதி), கோமரசங்குளம், இலுப்பக்குளம், – மன்னார் மறைமாவட்டம்
* பாலையூற்று, மாமாங்கம் – திரு.–மட்டு. மறை மாவட்டம்
* அப்புத்தளை, பாதநாவலை – பதுளை மறை மாவட்டம்

**சிறப்புப் பணிகள்**

* கற்பித்தல்:– யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, திரு. சூசையப்பர் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம், குருமடங்கள்
* உளநல ஆற்றுகை – ஸ்கந்தபுரம் (கிளி நொச்சி), யாழ்ப்பாணம்.
* அனாதைச் சிறுவர் இல்ல பராமரிப்பு – முழங்காவில், பேசாலை
* இடம்பெயர் மக்கள் பணி – யாழ்ப்பாணம்
* புலம்பெயர் மக்கள் பணி – பிரான்சு
* சமூகத்தொடர்பு – வவுனியா
* ஆன்மீகப் பணி – யாழ். போதனா வைத்தியசாலை

இவைகளெல்லாம் யாழ். மாகாண அ.ம.தி குருக்களால் ஆற்றப்படும் பணிகள் ஆகும். தற்போது யாழ். மாகாணத்தைச் சேர்ந்த 54 குருக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பிற நாடுகளிலும் பணியாற்றி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கருதினால், பேராயர்கள், ஆயர்கள், அப்போஸ்தலிக்க முதல்வர், குருக்கள் உட்பட ஏறக்குறைய 3450ற்கும் மேற்பட்ட அ.ம.திகள் உலகெங்கும் பணிபுரிகின்றனர்.

## குருமடம் நுழைய தேவையான கல்வித் தகைமைகள்

* 8ஆம் வகுப்பு நிறைவு செய்திருத்தல் வேண்டும் அல்லது
* க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது
*க.பொ.த. உயர்தரம் எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

அமலமரித் தியாகிகளின் அருட்சகோதரர்கள் குழுவில் இணையவிரும்புவோரும் அடிப்படை கல்வித் தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

*நீங்களும் எங்களோடு இணைய விரும்பினால்.... உங்கள் தொடர்புகளுக்கு....*

அதிபர்,
புனித வளனார் குருமடம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல. 021–2848

இயக்குனர்,
தேவஅழைத்தல்
புனித வனத்து சின்னப்பர் ஆலயம்,
அப்புத்தளை
தொலைபேசி இல. 057–68236

இயக்குனர்,
தேவஅழைத்தல்,
அமல அன்னை அன்பகம்,
முழங்காவில்,
கிளிநொச்சி.

# மறைக்கல்வி ஆணைக்குழுக் கூட்டம்

22.08.2001 அன்று இவ் ஆணைக்குழுக் கூட்டமானது மறைக்கல்வி நிலையத்தில் இயக்குனர் அருள்திரு ஆர்.சி. எக்ஸ். நேசராசா அவர்களின் தலைமையில் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

இதில் முதல் விடயமாக வருடாவருடம் நடைபெறும் 3 மாத மறையாசிரியர் பயிற்சி பற்றி ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இது நடைபெறவேண்டிய அவசியத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். 3 மாதத்தில் இவர்களுக்குரிய சிறப்பான பயிற்சியை சரிவர அளிக்க முடியாதிருப்பதால் பெற்ற பயிற்சியுடன் 1 மாதம் பங்குத்தளங்களுக்குச் சென்று கற்பித்தல் பயிற்சியில் ஈடுபட்டு பெற்ற அனுபவத்துடன் மீண்டும் மேலதிக ஒரு மாதப் பயிற்சியைப் பெற்று இதை நிறைவு செய்யலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்ததாக கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தைப் பற்றிய விடயம் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இச் சங்கத்தைப் வலுவுள்ளதாகவும் செயற்பாடு நிறைந்ததாகவும் ஆக்க என்ன செய்யலாம் என்று ஆராயப்பட்டது. முறைப்படி இச் சங்கத்தைப் பதிவுசெய்யாமல் இதை ஒரு வலுவுள்ள அமைப்பாக ஆக்கமுடியாது என்ற கருத்து ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்டது. இச் சங்கம் தமிழ் ஆசிரியர் சங்கத்தைப் போல் தொழில் ரீதியாக இயங்கும் ஒன்றல்ல, ஆன்மீகம் சம்பந்தமாக இயங்கும் ஒன்றாகவிருப்பதால் இதை மற்றைய சங்கங்களைப் போன்று பதிவு செய்ய முடியாதென்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். ஆயினும் குருக்கள் மன்றத்தில் இதுபற்றி ஆராயப்படும் என கிறிஸ்தோபர் அடிகளார் உறுதியளித்தார். எனவே, பங்கு ரீதியாக இல்லாமல் கல்வி வலய ரீதியாக இணைப்புப் பெற்று செயல்பட்டால் அதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இவற்றின் நோக்கம் குறிப்பாக சமய வளர்ச்சி மற்றும் இது சம்பந்தமான குறைபாடுகளை சரிசெய்வதுமாகும்.

பங்கு மறைக்கல்வி பற்றிக் கலந்துரையாடியபொழுது இதில் பரவலாக உள்ள பிரச்சினைகள் அலசி ஆராயப்பட்டது. எல்லா இடங்களிலும் ஒரே பாடவிதானத்தைப் பயன்படுத்துவதும் ஏககாலத்தில் ஒரே நேரத்தில் வகுப்புக்களை நடாத்துவதும் சாத்தியப்படாது என்ற கருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாடசாலைகளில் மாணவர்களுக்கு வாரம் 2 வகுப்புக்களில் பாடவிதானத்தை நிறைவுசெய்ய முடியாதிருப்பதால் பங்குமறைக்கல்வி வகுப்புக்களே பெரும்பாலும் இதற்குக் கைகொடுக்கின்றது. பல பங்குகளில் இதுவே நடைமுறையாக உள்ளது என்று கூறப்பட்டது. ஆகவே தற்போதைக்கு ஒவ்வொரு பங்கும் தங்கள் தேவைக்கு ஏற்றவாறு பாடத்திட்டங்களை தயாரித்து செயல்படட்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இறுதியாக மறைக்கல்வித் தேர்வு பற்றி ஆராயப்பட்டது. இது பாடசாலைகளுக்கும் மறைமாவட்டத்துக்கும் உறவை ஏற்படுத்தவும் மாணவர்களது கிறிஸ்தவ வாழ்வுக்கு உந்துசக்தியாகவும் விளங்குகிறதென எடுத்துரைக்கப்பட்டது. எனவே, இது அவசியமானதெனவும் வழமைபோல் நடைபெறவேண்டும் எனவும் எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். இம்முறை ஆசிரியர்களது பங்களிப்பை கூடுதலாகப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஆசிரியர்களைக் கொண்ட பரீட்சைக் குழு அமைக்கப்பட்டது. இக் குழுவே பரீட்சைக்கான கேள்வித் தேர்வுகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டது. மேலும் மாணவர் மத்தியில் வேதாகம அறிவை வளர்ப்பதற்கு வருட நடுப்பகுதியில் பாடசாலை ரீதியாக வேதாகம வாய்மொழிப் போட்டிகளோ அன்றேல் எழுத்துப் போட்டிகளோ, நடாத்தப்பட வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இறை ஆசியுடன் கூட்டம் நிறைவெய்தியது.

*தகவல்:–*
*யாழ். மறைக்கல்வி நிலையம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தமொன்று சுகந்தம் பெற விண்ணகம் சென்றது...

அருள்சகோதரி
நெவிஸ் லடிஸ்லாஸ் தி.கு.

அது வங்காலைக் கடலருகில் உருவெடுத்த வசந்தம். அதன் தாய் ''கோட்டுக் கத்தரீன்'' என்ற அடைமொழியால் அழைக்கப்படுபவள். அப்பெயருக்குப் பின்புலத்தில் நீண்ட ஒரு வரலாறு புதைந்துள்ளது. மாந்தையில் லூர்து அன்னை கெபியொன்றுக்கு கால்கோள் இட்ட பெருமையும், அதற்குரிய காணியைப் பெற இந்துக்களுடன் வாதாடி கோடு ஏறி வென்ற வீரமும் அவளுக்கேயுரித்தான தனிப் பண்பு. மரியன்னை பக்தி அவளிடம் இயல்பாக இருந்ததில் வியப்பொன்றுமில்லை. அதன் தந்தை மார்க்கு என்ற அமைதியான பேர்வழி. இந்த வசந்தம் சிறுவயதிலேயே தன் தந்தையை இழந்தது. தாயின் அணைப்பிலும், ஒரேயொரு சகோதரியின் பாசத்திலும் அன்புப் பரிமாற்றங்களைப் பருகியது.

சிறுவயதிலிருந்தே அதன் அறிவுத் தாகத்திற்கு புத்தகங்களே நீர்ச்சுனைகளாயின. வங்காலை, இளவாலை என்ற அறிவுத் தடாகங்களில் அறிவு என்ற நீரூற்றை அது பருக அன்னை வழிகாட்டினாள். தன் தாயின் வறுமையிலும் அந்த வசந்தம் செம்மையாக வளர்ந்தது. செதுக்கிவிட்ட சிலைபோன்ற உடலமைப்பும், பிராமணச் சிறுமியோ என்று ஐயுறுமளவுக்கு செம்மஞ்சள் கோலமும், சிரிப்புச் சிந்தும் முகமும், பளிச்சிடும் நீண்ட அமைதியான கண்களும் மெழுகுபோன்ற இதயமும், அதன் இயல்பான தோற்றப்பாடுகளே.

உலகம் அதன் இளமையைக் கண்டு, தேன் தோய்த்த அன்புக்கரம் நீட்டி அழைத்தது. வங்காலை மண் வளர்த்திட்ட விசுவாசமும், இளவாலை அறிவுப் பெருந் தடாகத்தில் அறிவுச் சுனைகளோடு சேர்த்து, திருக்குடும்ப கன்னியர் பூசிய இறையரசு பரப்பும் ஆர்வம் என்ற அத்தரும், அந்த வசந்தத்தை யேசு என்ற பெரும் வாசனைக்குள், இதயத்தைக் கொள்ளை கொள்ளுமளவிற்குக் கொடிபிடிக்கச் செய்தது. எளிமையும், அழகும், அமைதியும் கலந்த இந்த எம்மா என்ற வசந்தம், திருக்குடும்ப சபை என்ற பெருங்கடலுக்குள் இடம்பிடித்தது. 18.12. 1950இல் அது துறவறப் பூங்காவிலே எளிமை, கற்பு, அமைச்சல் என்ற பலவண்ண ரோஜா மலர்களை மாலையாக்கி, தன்னில் அணிந்து கொண்டு, தன் உள்ளம் கவர்ந்த கள்வனுக்கு, தன் இதயத்தைப் பறி கொடுத்தது.

இந்த வசந்தம் இறையரசின் ஆர்வத்தால் சுழல் காற்றுப் போன்று வவுனியா, பேசாலை, தலைமன்னார், ஊர்காவற்றுறை, இளவாலை, கரம்பன், பாஷையூர், மானிப்பாய் போன்ற பல பணித்தளங்களில் சுழன்றடித்தது. ''எல்லாம் இறையரசின் மகிமைக்கே'' என்ற உத்வேகத்துடன் ''யேசு, மரி, சூசை'' என்ற நாம ஜெபத்தை ஏழு ஸ்வரங்களில் இசைத்து, மனித நேயத்துடன் பணியாற்றியது. ஆன்ம தாகத்தால் இந்த வசந்தம் பற்றி எரியும்.

எளிமைக் கோலத்துடன், ஒரு தெய்வத்தின் வாரிசாக கல்விப் பணியிலும் சரி, வீட்டுப் பணியிலும் சரி அது சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தவறவில்லை. கல்விப் பணியில் பிஞ்சு உள்ளங்களுடன்தான் அதன் வாழ்வின் பெரும்பகுதி கடந்தது. அவர்களுடன் அளவளாவி, மழலை மொழி பேசி கல்விச் செல்வத்துடன் ஞானக்கதைகள் பேசுவதில் இந்த வசந்தத்திற்கு நிகரேதுமில்லை. பல சிறுவர்கள், சிறுமியர் இந்தச் சந்தனக் கட்டையில் தங்களை உரஞ்சி வாழ்வு பெற்றனர், பசியாற்றினர், ஆடை அணிந்தனர், உயர் பதவிகளைத் தேடினர், கடவுள் பக்கமும் திரும்பினர்.

ஏழைகளுக்காக தன் கையை அது என்றுமே நீட்டி வைத்திருக்கும்– சோர்வு என்பது அதன் வாழ்வுப் புத்தகத்தின் தொடக்கத்திலும், இடையிலும், முடிவிலும் கிடையாது. பிறர் துன்பங்களைத் துயரங்களைக் கேட்டு அது மெழுகாக உருகும். அதே ஏழைகளை அரவணைக்கும். தன் திறமைகளை எல்லாம் அது இறையரசிற்காக பல மடங்காகப் பெருக்கி, மனிதத்தை மலர வைக்க, துறவற சட்டங்களை சில வேளை உடைத்தும், தகர்த்தும் பணியாற்றத் தயங்கியதே இல்லை. குருபக்தி அதில் காட்டாற்று வெள்ளம் போல் பாயும்.

காலையிலும், மாலையிலும் அது தனியாக கோவிலுக்குள் இருந்து ''நம்பினேன் ஆண்டவரை நம்பினேன்'' என்ற திருப்பாடலைப் பாடி கடவுளுடன் சங்கமமாகத் தவறுவதேயில்லை. இடைவேளை இல்லாத வாழ்க்கையை இருபத்தைந்து, ஐம்பது ஆண்டுகளாக வாழ்ந்த இந்த வசந்தம் எம்மா. வெள்ளிவிழா, பொன்விழாக் கண்ட ஒரு கைக்கடிகாரம்.



கல்விப் பணியின் பின் ஒய்ந்திருந்த வரலாறு, அந்த வசந்தத்தின் வரலாறு அந்த வசந்தத்தின் வாழ்வில் இல்லை. மறையறிவு கொடுப்பதிலும் ஓர் மகராசி. பாடசாலையில் இருந்து கன்னியர் இல்லத்திற்குக் களைத்து நாம் வரும்போது உற்சாகம் என்ற விற்றமின் தருவதுடன் எமக்காகச் செபித்து, பணியை இலகுவாக்குவதிலும், சுமைகளை எளிதாக்குவதிலும் ஓர் கைதேர்ந்த போக்கு, இந்த வசந்தத்தின் வாழ்விலும் பூத்துக் குலுங்கும்.

நீண்ட விடுதலையைக் களிக்க விரும்பியும் பொன்விழாக் கொண்டாடும் ஆவலுடனும் அது பிறந்த மண்ணுக்குப் பறந்தது. மரணத்தின் காலடிச் சலங்கை ஒலி அதன் காதில் அப்போது சிறிதும் கேட்கவில்லை. மூன்று வாரம் அது உற்றார் உறவினர்களின் வீடுகளில் துறவற இல்லங்களில் புகுந்து அன்புறவு கொண்டது. மன்னாரில் நின்று சகோதரி டெய்சியிடம் ''உன் தங்கை எங்கே இருக்கிறா? போகும் போது நெவிசுக்கு குஞ்சுக்குளத்துத் தேன் கொண்டுபோக வேண்டுமென்ற'' அன்புத் தேன் பாயும் கடைசிமொழி சொன்னதாக சகோதரி நேற்றுச் சொன்னபோது நெஞ்சம் குமுறியது. 24ம் திகதி காலையில், அது வாழ்வுபெற, அதுவும் நிறைவாழ்வு பெற மன்னாரில் நின்று விண்ணகம் சென்றுவிட்ட செய்தியை Sr. சோபி சொல்லியும் , எழுதியும் அனுப்பியபோது ''நம்பினேன் ஆண்ட வரை நம்பினேன்'' என்று அது நாளும் பாடும் கோவிலில் நானும் இருந்தேன். யேசுவே! என்றேன் துக்கம் நெஞ்சை அடைத்தது.

## மீட்பின் சுவடுகள் ~ 2

### வார்த்தையின் வாணமை – சூரியநிலா –

பண்பு நிறை பலஸ்தீனமன்று
பகுதி மூன்றாய் பகுத்ததினால்
கலிலேயா சமாரியா யூதேயாவென
கழன்று கழன்று
கட்டது பிரிந்தது

யூதர்கள் வாழ்ந்த
யூதேயா தேசம்
முன்னது கொண்டு
முழங்கியே நின்று
ஆதிக்க வெறியில்
அகமது மகிழும்
அரசனாம் ஏரோதை
ஏற்றியே நின்றது!

உலகியல் இன்பமாம்
உணர்வுப் பசியதை
காமம் களியாட்டம்
காசு வேட்கை
மங்கை மது
அரியணை வேட்கை
என்று கொண்டு தீர்த்தமாடி
திமிர் பிடித்தான் ஏரோதரசன்.

அவனது நாட்டின்
ஆத்மீகக் குரவராய்
ஆலய பணிதனுள்
அகமதைப் படைத்து
மகிழ்ந்தே வாழ்ந்தார் சக்கரியாசும்

இறை பணிபுரியும் சக்கரியாசு
இல்லறமதனை எலிசபேத்துடனே
இனிதென நடத்தி வாழ்ந்தபோதும்
வயதுகள் பலவாய் ஓடிச் சென்றும்
வாரிசு இன்றி வருத்தம் கொண்டார்.

ஆலயப் பணிதனில்
ஆழமாய் மூழ்கி
அன்புடன் இறையிடம்
தன் குறை கூறி
வழிபட்டிருந்த வசந்தப் பொழுதில்
தேவனின் தூதனாம்
சம்மனசானவர்
சந்நிதிதனிலே தரிசனம் கொடுத்து
'சக்கரியாசே உன் குறைநீங்கி
சந்தோஷப் பூவாய்
எலிசபேத் வயிற்றில்
சங்கமமாவான் ஆண்மகவென்று
சத்தியமிதுவே ஆண்டவன் சித்தம்
அருளப்பன் எனவே
அவன் பெயரிட்டு
அழைத்து மகிழும் காலமதிலே
உலகம் முழுதும்
மகிழ்வதில் திளைக்கும்'
என்றே தூதன் நவின்றிடவே

பணிந்தே வணங்கி
பயந்த குரலில்
'நானும் அவளும்
முதிர்ந்த கனிகள்
முடிந்திடுமா இவ்வருள் பலிக்க'
என்றே சொன்னார் சக்கரியாசும்

உடனே தூதன்
'உன்னத இறைவனின்
உயிருள்ள கூற்றில்
உனக்கேனில்லை நம்பிக்கை' என்று
'நம்மை கூடி நம்பிக்கை வருந்தனை
ஊமையாகவே உழல்வாய்' என்றான்

உடனே சக்கரியாசும்
உச்சரிக்க முடியாதவனாகி
ஊமையாய் மாறி
ஊழியம் செய்தான்!

# பங்கேற்கும் திருச்சபையை நோக்கி

## சென்ற இதழ் தொடர்ச்சி...

கல்விக்கென அதிகளவு பண, நேரத்தை செலவிட்டு உள்ளோம். குடும்பங்கள் இதில் அக்கறை எடுக்காவிட்டால், நாம் மேற்கொண்ட பிரயாசை அனைத்தும் வீணாகி விடக்கூடும். பல மறைமாவட்டங்களில் முழுக்குடும்பத்தையும் பயிற்றுவித்து விசுவாசத்தைப் பரிமாறச் செய்வது புதியதோர் போக்காக மாறியுள்ளது. பெற்றோர் இம் முயற்சிக்குப் பெரும் ஆதரவு கொடுக்கிறார்கள். எந்த வழிகளில் எமது பொதுநிலையினரை முதிர்ச்சியுறச் செய்து, கிறிஸ்துவின் பணியை குடும்பங்களுக்கும் அயலவருக்கும் விஸ்தரிக்க முடியும்? எனக்குத்தெரியும். இலங்கை உட்பட பல ஆசிய நாடுகளில் பொதுநிலையினர் சமூக – சூழல் சார் பிரச்சனைகளுக்கு விண்ணரசின் மதிப்பீடுகள் மூலம் தீர்வுகாண முயற்சிக்கிறார்கள். இதற்கு தொடர்ச்சியான உருவாக்கமும், பயிற்றப்பட்ட ஊக்குவிப்பாளரின் துணையும் வழிகோலுகிறது. பணி சிறிய பகுதிகளில் தொடங்கப்படமுடியும். அதேவேளை மறைமாவட்ட தேசிய ரீதியில் பயிற்றப்பட்ட வர்களை வழங்கி வழிகாட்டமுடியும். இலங்கையில் ''ஆசிபா'' முறை இதற்கு மிகவும் சிறந்த ஊடகமாக அமைகின்றது. பங்கேற்கும் திருச்சபை என்பது வழிகாட்டிகள் சொல்வதை மக்கள் மாத்திரம் கேட்பது அல்ல, மாறாக கிறிஸ்துவை எதிர்கொண்டு, நற்செய்திக் குறிக்கோள்களை முன்நின்று, எடுத்துச்செல்வதும் ஆகும். அந்த வகையில் நாம் 3 வகையினரைக் கருத்தில் கொள்ளவேண்டும். (பொது மக்களில்) பொதுநிலையினர், பெண்கள் , ஏழைகள்.

### பொதுநிலையினரின் பங்கு

இவர்களின் பங்கு புதிய நூற்றாண்டில், உலகிற்குள் சென்று, கடவுளின் அன்பை வெளிப்படுத்த வேண்டும். திருவழிபாடு இங்கு முக்கிய இடம் வகிக்கின்றது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிற்பாடு திருப்பலிக்கு உதவுவோர் மேலதிக நற்கருணைப் பணியாளர் அறிமுகப்படுத்தப்பட்டதனால் பொது நிலையினரின் பணிமேலும் சிறப்புற்று உயர்ந்துள்ளது. பொதுநிலையினரைப் பொறுத்தவரையில் வழிபாடு முக்கியமே. அதைவிட தமது குடும்பம், வேலைத்தளம், பாடசாலை, வைத்தியசாலை போன்றவற்றில் அவர்களது பங்கேற்பு முக்கியமாகிறது. கிறிஸ்துவை மையமாகக் கொள்ளல், சமூகசேவை, அன்புப் பணி ஆகிய மூன்றும் பணிக்கு வழிகாட்டுதலாக அமையும். திருப்பலியே அனைத்து வழிபாடுகளினதும் உச்சக்கட்டம். கிறிஸ்து எம்மை அழைக்கின்றார். மற்ற மதங்களின் விசுவாசிகட்கும், அவரை இன்னும் அறியாதோருக்கும் தம்மை எடுத்துச் செல்லல்.

### பெண்கள்

ஆசிய பேரவை ஆசிய ஆயர் மாநாட்டின் கொள்கைத் திரட்டுக்கள் அனைத்திலும் பெண்கள் அவர்கள் திருச்சபைக்கும், சமூகத்திற்கும் ஆற்றும் பங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இங்கேயும் எமது பார்வை பதிக்கப்படவேண்டும். பெண்களின் குழுக்கள் அபிவிருத்தி, பெண்களின் பூரண பங்கேற்பு எமக்கு ஒரு அச்சுறுத்தல் அல்ல. ஆண்களும் பெண்களும் சமமாக வாழ வழிவகுக்கும் குடும்ப – பொருளாதார உதவிகள் வலுப்பெற வேண்டும்.

### ஏழைகளுக்கு நற்செய்தி

யாருக்கு நற்செய்தி தேவை? நற்செய்தி தரும் ஆறதலை எதிர்பார்த்துக் காத்திருக்கும் எல்லோர்க்கும்.

கண்ணீர் சிந்துபவர்கட்கு யாரால் நற்செய்தியைக் கொடுக்கமுடியும்? பொது இடங்களுக்கு, சேரிகளுக்கு, தோட்டங்களுக்கு நற்செய்தியைக் கொடுக்கமுடியும்.

நாம் எமது பொதுநிலையினரைப் பயிற்றுவிக்கவேண்டும். அப்போது அவர்களால் அனைத்துவகை மக்களுக்கும் நற்செய்தியை அறிவிக்கமுடியும். அதேவேளை நல்ல பெற்றோராக, குடும்பஸ்தராக வேலை புரிபவர்களாக அவர்கள் புரியும் அளப்பரிய பணியையும் ஒருபோதும் மறக்கமுடியாது.

### முடிவு

''ஆழத்திற்குக் கொண்டு சென்று வலைகளைப் போடுங்கள்'' எனும் யேசுவின் வார்த்தைகளை நம்பி எமது பணியில் தொடர்ந்து முன்செல்வோம். தூயஆவியைப் எமது இதயங்களில் ஏற்கும்போது, அவரோடு ஒத்துழைக்கும்போது, எமது மகிழ்ச்சி மேலும் அதிகமாகும். இப்புத்தாயிரம் ஆண்டு ஆவியின் வல்லமையால் வழிநடத்தப்பட வேண்டும். நாம் அவரது சாட்சிகளாக அழைக்கப்பட்டுள்ளோம். அந்த ஆவி மன்னிப்பின் அன்பின் இரக்கத்தின் அமைதியின் ஆவியானவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாதுகாவலன் 125ஆவது

## ஈழத் தமிழரின் பாதுகாவலன்

### உதயன் ஆசிரியரின் ஆசிச் செய்தி

ஈழம் வாழ் கத்தோலிக்கரின் தமிழ்க் குரலாக ஒலிக்கும் "பாதுகாவலன்" பத்திரிகை அதன் வரலாற்றுப் பாதையில் 125 ஆண்டுகளை நிறைவுசெய்வது அறிந்து பேருவகை அடைகிறோம்.

முதலாவது தமிழ் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவல னின் தோற்றமும் வளர்ச்சியும் நீண்ட சரித்திரப் பின்னணி கொண்டவை.

யாழ். குடாநாட்டு கத்தோலிக்க மக்களின் குரலாகவும் இந்த மண்ணிலிருந்து உலகம் முழுவதும் ஒலிக்கும் "பாதுகாவலன்" யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் அனுபவித்த எல்லா நெருக்கடிகளையும் இடர்பாடுகளையும் எதிர்கொண்டு அந்த அனுபவங்களுக்கூடாக வீறுநடை போட்டு வளர்ந்து வருவது வியந்துரைக்கப்பட வேண்டியது.

1876ஆம் ஆண்டு பாதுகாவலனின் முதல் பிரசவத்திற்கு அடித்தளமிட்ட - அத்திவாரமாகத் திகழ்ந்த - மதத் தலைவர்கள் முதல் இன்று அதன் ஆசிரியராக விளங்கும் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை வரை மிகப் பலரது ஆளுமையும் அயராத அர்ப்பணிப்புமே பாதுகாவலனின் இன்றைய வளர்ச்சிக்கு உரமாகின.

"பாதுகாவலனின்" தோற்றமும் வளர்ச்சியும் குடாநாட்டின் அச்சுக்கலை வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடையது.

அச்சுக் கலையின் பல்வேறு படிமுறைகளையும் தாண்டி இன்று நவீன ஓவ்செற் அச்சுப் பதிப்பாக வெளிவந்துகொண்டிருக்கும் "பாதுகாவலன்" கத்தோலிக்க தமிழர்களின் காவலனாக மட்டுமன்றி முழுத் தமிழ் மக்களின் உரிமைக் குரலாகவும் ஓயாது ஒலிக்க வேண்டும்.

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் அவையால் (Editors Guild of Sri Lanka) ஆண்டு தோறும் வழங்கப்படும் பத்திரிகைத்துறை விருதுகளில் கடந்த ஆண்டு சிறந்த பக்க வடிவமைப்புக்கான விருது "பாதுகாவலன்" பத்திரிகைக்கு கிடைத்தது பெரும் சிறப்பாகும்.

பலரால் புடம் போடப்பட்டு இன்று பிரகாசிக்கும் "பாதுகாவலன்" பத்திரிகை அதன் பாரம்பரியத்தை தொடர்ந்து கட்டிக்காத்து அதற்கு மேலும் மெருகூட்டும் என்பது எமது நம்பிக்கை.

125ஆவது ஆண்டு நிறைவை முழு நிறைவுடன் கொண்டாடும் "பாதுகாவலன்" குடும்பத்தினருக்கு "உதயன்" பத்திரிகைக் குடும்பத்தினர் தங்கள் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

ம. வ. கானமயில்நாதன்
பிரதம ஆசிரியர், உதயன் - சஞ்சீவி

# தீர்வு ஒரு சமாதானமன்று

**S. M. செல்வரெட்ணம்**
**(கரவையூாச் செல்வம்)**

### முன்னுரையாக....

பதினேழு வருடங்களாக ஒரு கொடிய போர் வடகிழக்கில் நடைபெறுகின்றது. இதனால் ஏற்பட்ட கொலைகள் பல, சித்திரவதைகள் பல, இழப்புக்கள் பல, அழிவுகள் பல, களவுகள் பல, பாதிப்புக்கள் பல, இடப்பெயர்வுகள் பலப் பல. இவ்வளவு நடந்தும், இவற்றினூடாக வடபகுதியில் மக்கள் இன்னும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். இவர்களுடைய மனத்திடனும் மனத்தைரியமும் மிகவும் பாராட்டுக்குரியது. அதேபோன்று இவ்வளவுக்கும் ஊடாக ''காவலன்'' வார ஏடும் வளர்ந்து வந்துள்ளது. இதுவும் பாராட்டிற்குரியதே. இந்த வார ஏட்டுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் காவலன் விழா எடுக்கும் இந்நேரம் மனதார வாழ்த்துகின்றேன். *வளர்க, இவர்கள் பணி.*

### எனது தொடர்பு

1970 களில் காவலனுடன் எனக்கு ஓர் உறவு ஏற்பட்டது. கட்டுரைகள், திரைப்பட விமர்சனங்கள் என்று எனது ஆக்கங்களைக் காவலன் அப்பொழுது தாங்கி வந்தான். காவலன் மூலமாக பல வாசகர்களுடன் எனக்கு ஓர் உறவு உருவானது. 1980களில் நடுப்பகுதியில் நாட்டிற்கு வெளியே இருக்கவேண்டிய ஓர் ''அவசியத்தில்'' இந்த உறவில் ஓர் தேக்கம். மீண்டும் 1990களின் முற்பகுதியில் உறவு தொடர்ந் தது. 1995ல் ஏற்பட்ட இடப்பெயர்வில் நானும் இடம்பெயர்ந்தேன். மீண்டும் ஒரு தேக்கம்! பழைய உறவை மறவாது காவலன் விழாக்கோலம் போடும் இவ்வேளையில் என்னையும் காவலனில் சந்திக்க அழைத்த ஆசிரியர் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

### இருட்டில் ஒரு ஒளிக்கீற்று

ஈழத்தின் *(நான் ஈழம் என்று குறிப்பிடுவது இலங்கை என்ற நாட்டை. 1970களிலும், 80களிலும், இந்தப் பொருளில்தான் நான் ஈழம் என்ற சொல்லைப் பயன்படுத்தினேன்)* வடகிழக்குப் பகுதிகளின் வரலாற்றில் கடந்த பதினேழு ஆண்டுகளும் ஓர் இருண்ட காலம். *(1960களிலேயே கருமை மேகங்கள் சிறிது சிறிதாக திரள ஆரம்பித்தன. எங்கள் அன்றைய அரசியல் தலைவர்கள் எரியும் வீட்டில் அன்று சுருட்டுப் பற்றிக் கொண்டிருந்தார்கள்)* இதில் சந்தேகமேயில்லை. இதை மறுப்பதற்கும் இல்லை. இருள் சூழ்ந்த குகையின் மறுமுனையில் ஒரு சிறு ஒளி தெரியாதா என்ற ஓர் ஏக்கம் வடகிழக்குப் பகுதி மக்களின் வாழ்வில் என்றுமே எதிரொலித்துக் கொண்டுதான் இருக்கின்றது. வடகிழக்குப் பகுதிகளின் வெளியே வாழும் ஈழத்தமிழர் பலரின் ஏக்கமும் அதுவே, எதிரொலியும் அதுவே. ஒருவேளை இந்த ஏக்கமும், ஒளியை நோக்கிய எதிர்பார்ப்பும் வளர்த்து வந்த நம்பிக்கைதான் இந்த மக்களை இன்றும் இன்னமும் வாழ வைக்கின்றதோ!

இந்த நம்பிக்கையை உடைக்க அடிக்கடி முனைகின்றனர் போரில் ஈடுபட்டிருப்போர். ஆயினும் பதினேழு ஆண்டுகளினூடாக ஏற்பட்ட பாரிய இழப்புக்கள் மத்தியிலும் பல இடப்பெயர்வுகள் மத்தியிலும் இந்த நம்பிக்கையை அழியவிடாது தமிழ் மக்கள் காப்பாற்றி வந்திருக்கின்றார்கள். இந்த உண்மையை வடகிழக்குக்கு வெளியே வாழும் பலர் இன்னும் உணரவில்லை. உணரவிடாது ஈழத்து நாளேடுகள் பல, வானொலி, தொலைக்காட்சி போன்றவை காத்து வந்திருக்கின்றன. காத்து வருகின்றன.

### மக்கள் தொடர்பு சாதனங்களின் அதர்மம்

தென்னகத்து வானொலி, தொலைக்காட்சி, பெரிய நாளேடுகள், வாரஏடுகள் போர் நீடிப்பதற்குப் பகிரங்கமாகவே வழி வகுத்து வருகின்றன. ஒரு சார்புடன் கட்டுரைகள் கட்டுக்கட்டாக வரையப்பட்டு வருகின்றன. இனத்துவேஷம் பகிரங்கமாகவே வளர்க்கப்படுகின்றது. நாட்டில் தமிழ் மக்களுக்கு பிரச்சனையெதுவும் இல்லையென்று வாதிடுபவர்கள் இன்றும் பலர். இவர்களுள் மதத் தலைவர்களும், மத குருக்களும், ஏன் துறவிகளும் பங்கெடுக்கின்றார்கள்.

அரச பயங்கரவாதத்தை பாதுகாப்பென்றும், விடுதலைப் புலிகளின் போராட்டத்தை பயங்கரவாதமென்றும் அடிக்கடி கூறிவருவது மட்டுமல்ல, உலக அரங்கிலேயே இப் பிரசாரத்தில் தென்னக ஏடுகள் ஆள்வோருக்குத் துணைவந்துள்ளன. நடுவுநிலையில் நின்று போராட்டம் எது, பயங்கரவாதச் செயல்கள் எவை என்று பாகுபடுத்தி எழுதும் தர்மம் ஏனோ ஏற்படவில்லை. வடகிழக்கில் நடப்பதென்ன? யாழ். குடாநாட்டிலும், வன்னியிலும் மக்கள் அனுபவிக்கும் இழப்புக்கள், துன்பங்கள் எவை? என்று விரிவாக விபரமாக இந்த ஏடுகள் இன்றுவரை எழுதியதில்லை. தொலைக்காட்சி படம் பிடித்துக் காட்டவில்லை.

ஜனநாயகம் பேசும் அரசு வடகிழக்கைப் பொறுத்தமட்டில் பாதுகாப்பு என்ற கவசத்தில் செய்தித் தணிக்கையை வன்மையாகத் திணித்து வருகிறது. இது போதாதென்று ஆட்சிக்குப் புறத்தே உள்ள நாளேடுகளும், வார ஏடுகளும் கூட தாமே தம்மை தணிக்கைக்குட்படுத்தி ஒரு சார்பாக எழுதி வருவது பத்திரிகைத் தர்மம் அல்ல.

இதனால் பெரும்பான்மையான சிங்கள மக்கள் போரைப்பற்றிய விடயத்தில் இருட்டிலேயே இருக்கிறார்கள். உலக அரங்கிலேயும் அதே இருட்டடிப்புத்தான். இவ்வளவையும் நன்கு புரிந்துகொண்ட வெளிநாட்டவர்களும் இருளில் இருக்க விரும்புவதாகவே தெரிகின்றது. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில்தான் போருக்குத் தீர்வும் நாட்டில் சமாதானமும் தேவை என்ற பேச்சும் தலைதூக்கி வருகின்றது.

### முரண்பாடுகளுடன் ஒரு சௌகரியம்!

இன்றைய உலகிலும் குறிப்பாக நமது நாட்டிலும் ஓர் ஆரோக்கியமற்ற பழக்கம் சாதாரணமாகி வருகின்றது. முரண்பாடுகளுடன் சௌகரியமாக வாழப் பழகிக் கொண்டோம். வெளி முரண்பாடுகள், அக முரண்பாடுகளின் புறத்தோற்றமுந்தானே! இங்கு சில உதாரணங்கள் உதவலாம்.

* ''சமாதானத்திற்கான போர்''
* ''சண்டையை நிறுத்தாமல் சமாதானம் பேசுவோம்.''
* அடக்கி ஆட்சி செய்துகொண்டே மக்கள் விடுதலை பற்றிப் பேசுவோம்.
* மனித உரிமைகளைப் பறித்துக்கொண்டே மக்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்போம்.
* கொலைகளைச் செய்துகொண்டே, உயிரைப் பாதுகாப்போம் என்று வாதிடுகின்றார்கள்
* பத்திரிகைச் சுதந்திரத்தைக் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டே, பத்திரிகைச் சுதந்திரத்தின் அவசியத்தை உலகிற்கு எடுத்துரைக்கின்றோம்.
* நீதியற்ற நாட்டில் நீதிமன்றங்கள் வேறு. நீதிபதிகளே கட்சி சார்புடன் நியமனம் பெறுகின்றனர்.
* சர்வாதிகார அரசியலை நடத்திக்கொண்டே இன்று பல அரசியல் தலைவர்கள் ஜனநாயகம் பேசுகின்றார்கள்.
* மனித உரிமைகள் பற்றி உரக்கக் குரல் கொடுக்கும் நாடுகள் கொடியபோர் ஆயுதங்களை உருவாக்கி போரில் ஈடுபட்டுவரும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.
* போரில் ஈடுபட்டுவரும் இரு தரப்பினருக்கும் சமாதானத்தின் அவசியத்தை உணர்த்தி வரும் நாடுகள், போரைத் தொடர்வதற்கு ஆயுதங்களை அவர்களுக்கே விற்றுவருகிறார்கள்.

முரண்பாடுகளுடன் சௌகரியமாக வாழ நாம் பழக்கப்படுகின்றோம்: பழகிவருகின்றோம். இது ஓர் ஆபத்தான நிலையென்றே எனக்குத் தோன்றுகின்றது. ஆயினும் கட்சி சேர்ந்து ''நீ செய்தால் பிழை, ஆனால் நான் செய்தால் சரி'' என்ற ஒரு நியாயப்படுத்தும் நிலைப்பாடும் தோன்றியுள்ளது.

துவக்குப் பலம் இன்று இந்த நாடுமுழுவதும் முழுமையாகப் பரவிவிட்டது. துவக்குப் பலம் வளர துவக்குப் பயமும் வளரத்தானே செய்யும்? இதனால் ''நீதிமேல் பசிதாகம் கொண்டோர்'' கூட மௌனிகளாகி விடுகிறார்கள். நல்லவர்கள், நடுவுநிலமை கொண்டோர் கூட வழிதவறி விடுகிறார்கள். பணத்தையும் பதவியையும், அதிகாரத்தையும் தேடுபவர்கள் முரண்பாடுகளை வளர்க்க உதவுகின்றார்கள்.

ஆன்மீகத்தை வளர்க்கவேண்டிய மதத் தலைவர்கள், துறவிகள் கூட மத நிறுவனங்களில் சிக்கி, நிறுவனப் பாதுகாப்பை நோக்கி ஒன்றில் மௌனிகளாகின்றார்கள், அன்றேல் பலத்திற்கும் அதிகாரத்திற்கும் பின்னால் ஒழிகின்றார்கள். ஒரு சில துறவிகளும் குருக்களும் இனத்துவேஷம் பேசிக் கொண்டே பரிசுத்த ஆவியையும் வரவழைக்கின்றார்கள்! அரசியலுக்காக, பதவிக்காக, அதிகாரத்திற்காக தங்கள் ''ஆன்மாவை'' விற்றுவிடுகின்றார்கள் **(Sell their Souls)** சில மதகுருக்களும் துறவிகளும். இப்படிப்பட்ட ஒரு பின்னணியிலேதான் சமாதானப் பேச்சும் அவ்வப்போது தலைதூக்கி வருகின்றது

### தீர்வு சமாதானமன்று

பதினேழு நீண்ட ஆண்டுகளாக நாட்டில் நடைபெற்று வரும் இக்கொடிய போருக்குத் தீர்வுகாண இன்று சில முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகளை நாம் அனைவரும் வரவேற்க வேண்டும். வடகிழக்கு மக்கள், அதிலும் குறிப்பாக யாழ். குடாநாட்டு மக்களும் வன்னி மக்களும் இன்றுவரை அனுபவித்த, – அனுபவித்து வரும் துன்பம் போதுமானது. யாழ். ஆயர் அண்மையில் கூறியது போல ''இனியும் இந்த மக்களால் இத் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியாது''. தீர்வுகாண மத்தியஸ்தம் வகிக்க நோர்வே நாடு எடுக்கும் முயற்சிகளை வரவேற்போம். ஒத்துழைப்பையும் மனதார வழங்குவோம்.

இந்நேரம் இந்த முயற்சியில் தோன்றும் சில சொற்பிரயோகங்கள் சில குழப்பங்களையே உருவாக்குமென்பதை இங்கு கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

போருக்குத் தீர்வு காண்பது ஒன்று. சமாதானம் வேறொன்று. போருக்குத் தீர்வொன்றைக் காண்பதினால் மட்டும் சமாதானம் தோன்றாது. தீர்வு சமாதானத்திற்கு வழிவகுக்கும் – வழிவகுக்கலாம். ஆனால் தீர்வு சமாதானமன்று.

### தீர்வு

போர் தொடங்கிய காரணங்களை, சூழலை அறிந்து, நாட்டின் அனைத்து இனங்களின் உரிமைகளைப் புரிந்து, நீதியின்படி போருக்கு ஒரு தீர்வுகாண வேண்டும். அடிப்படை மனித உரிமைகளோடு அனைத்து மக்களும் வாழ ஒரு முடிவு காண்பது தீர்வுக்கு அவசியம். வெவ்வேறு இனங்கள் தங்கள் தங்கள் இனத்தை வளர்க்கவும் , கலை பண்பாட்டை வளர்க்கவும், கல்வி, தொழில் துறைகளை வளர்க்கவும், பாதுகாப்போடு வாழவும் தீர்வு துணைசெய்ய வேண்டும். போரின் தீர்வை அமுல்படுத்த – நடைமுறைப்படுத்த மூன்றாவது நாட்டின் உதவியும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு மலரிலிருந்து...




## இன்று வெளிவரும் அனைத்து தமிழ் கத்தோலிக்க செய்தித் தாள்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் தாயாக நின்று வழிகாட்டுகின்றாள் பாதுகாவலன் அன்னை

### வெட்டாப்பு ஆசிரியரின் ஆசிச் செய்தி

மலர்ந்துள்ள மூவாயிரம் ஆண்டின் தொடக்கத்தில், இலங்கைத் தமிழ் கத்தோலிக்க பத்திரிகையின் உயிர்நாடியாகத் திகழும் பாதுகாவலன் மலரின் 125வது ஆண்டு சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி பகர்வதில் பெருமை அடைகின்றேன். கடந்த ஒன்றேகால் நூற்றாண்டுகளாகத் தமிழ் கத்தோலிக்க விசுவாச வளர்ச்சிக்கு தனித்து நின்று ஓங்கி ஒலித்த பெருமை பாதுகாவலன் பத்திரிகைக்கு உண்டு என்பது அனைவருக்கும் வெள்ளிடைமலை. இன்று நமது நாட்டில் வெளிவருகின்ற எத்தனையோ கத்தோலிக் தமிழ் சஞ்சிகைகளுக்கு மத்தியில் ஒரு மணிமகுடம் வைத்தாற்போல் கொலு வீற்றிருக்கின்றது பாதுகாவலன்.

அதுமட்டுமல்லாது இன்று வெளிவரும் அனைத்து தமிழ் கத்தோலிக்க செய்தித்தாள்களுக்கும், சஞ்சிகைகளுக்கும் ஒரு தாயாக நின்று அவள் வழிகாட்டுகின்றாள் என்பது அனைவரும் அறிந்த உண்மை. எத்தனையோ இடர்கள், துன்பங்கள் குறுக்கிட்ட போதும், விசேட விதமாக தொடரும் யுத்தத்தினால் முழு யாழ்ப்பாணமுமே இடம்பெயர்ந்த போதும், அரசின் பொருளாதாரத் தடையினால் அச்சகப் பொருட்கள் தடைப்பட்ட போதும் நான் எனது மக்களுக்கு பாதுகாவலனாக இருப்பேன் என்ற எண்ணத்திலும், சிந்தனையிலும் சிறிதும் தளராது தனக்கிருந்த குறைவான வளங்களை உள்வாங்கிக்கொண்டு தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்ட பாரம்பரியத்திற்கு விசுவாசத்தினால் உரம் சேர்த்த பெருமை பாதுகாவலனுக்கு உண்டு என்றால் அது மிகையல்ல. இவ்வாறு தமிழ் மக்களின் முழு விடுதலைக்கும் ஆன்மீக உரமூட்டும் பாதுகாவலனின் ஒன்றேகால் நூற்றாண்டுப் பணி இன்றும் தொடர வாழ்த்துகின்றேன். உன்னுடைய முதுமையிலும் கன்னிமை குன்றாச் சேவை பாரெங்கும் பரவி தமிழ் கூறும் நல்லுலகிற்கும் எம்மைப் போன்ற உனது வழித்தோன்றல்களாகிய வெட்டாப்பு பத்திரிகைக்கும் கிடைக்கட்டும்.

"இறைவார்த்தையை அறிவி. வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் கருத்தாயிரு. கண்டித்துப்பேசு, கடிந்துகொள். அறிவுரை கூறு. மிகுந்த பொறுமையுடன் கற்றுக் கொடு".

பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியருக்கும் சிறப்பு மலர்க் குழுவினருக்கும் இறையாசீர் இணைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அருள்திரு A.A. நவரெட்னம், ஆசிரியர் - வெட்டாப்பு

---

சமாதானம்

சமாதானம் ஓர் ஒப்புரவின் (**reconciliation**) அடிப்படையில் / விளைவாகத் தோன்றுவது. ஆகவே, உண்மையான சமாதானத்தை நாம் விரும்புவோமானால் இனங்களுக்கிடையே ஒப்புரவு அவசியம். இந்த ஒப்புரவு நடைபெற வேண்டுமானால், நாம் துணிவுடனும், நேர்மையுடனும் சில கசப்பான, நோவான உண்மைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும். நாம் செய்த பாரிய குற்றங்களை, தவறுகளை அடையாளங்கண்டு அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது செயலுக்கு நாமே பொறுப்பேற்க வேண்டும். மன்னிப்பும் கேட்போமானால் நாம் தெய்வத்தன்மையை அனுபவிப்போம். ''மன்னிக்கத் தெரிந்தவன்/ள் மாணிக்கக் கோவிலப்பா'' கவிஞனின் கூற்று.

இந்த நாட்டில் இன்று மிகவும் அருகிவரும் ஒன்று ''கணக்குக்கொடுப்பது'' (**Accountability**) அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள் வெவ்வேறு பொறுப்புக்களை ஏற்றவர்கள் தங்கள் தங்கள் பொறுப்புக்களுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலைப்பாடு தோன்றுமானால் சமாதானம் தோன்ற வாய்ப்புண்டு. இங்கு நாளேடுகள், வார ஏடுகள், வானொலி, தொலைக்காட்சி ஒத்துழைக்க வேண்டும். நடுவுநிலமை தவறாது தங்கள் பணியை இவர்கள் நாட்டு மக்கள் நலன் கருதித் தாராளமாகத் தருதல் வேண்டும்.

மதத்தலைவர்கள் தங்கள் பங்கைத் தாராளமான மனத்துடனும், திடனுடனும், ஆன்மீக அடிப்படையில் தருதல் வேண்டும். நாட்டில் உள்ள பெரியோர்கள் பின்வாங்காது ஒத்துழைப்புத் தருதல் வேண்டும்.

சீரழிந்து கொண்டு போகும் இந்த நாட்டை காப்பாற்ற வேண்டுமானால், இப்படிப்பட்ட ஒரு முயற்சி இந்த நேரத்தில் அவசியந்தேவை.

தென்னாபிரிக்க அநுபவம்

ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் இருந்து தென்னாபிரிக்கா சென்ற ஐரோப்பியர்கள் *(இங்கு நான் ஆங்கில, அயர்லாந்து நாடுகளையும் இணைத்தே கூறுகின்றேன்)*, அந்த நாட்டை ''தமது நாடாக்கியது'' மட்டுமன்றி, தென்னாபிரிக்க மக்களை *(சுதேசிகள்)* அடக்கி பல ஆண்டுகள் ஆட்சி செய்து வந்தனர். வெளியில் இருந்து சென்ற ஒரு சிறுபான்மை, உள்ளிருந்த பெரும்பான்மையினரை அடிமைகளாக்கி அடக்கி ஆண்டு வந்த ஒரு கொடிய செயலை உலகம் ஆதரித்து வந்தமை ஒரு பாரதூரமான அதர்மம். இது போதாதென்று இந்த கொடிய செயலை ஆதரித்த மேல் நாட்டவர்கள் தம்மை நாகரீகத்தில் முன்னேறியவர்களென்றும் கூறிக் கொண்டார்கள்.

தென்னாபிரிக்காவில், தென்னாபிரிக்க மக்களின் மனித உரிமைகளுக்காகப் போராட்டங்கள் பல வடிவங்களில் நடைபெற்று வந்தன. எமது நாட்டில் நடைபெறுவது போன்று அங்கும் பல கொலைகள், பல அழிவுகள், பல காட்டிக்கொடுத்தல்கள், சித்திரவதைகள், செய்தி இருட்டடிப்பு, பொய்பரப்புதல், முகவரியே இன்றி ''மாயமாக'' மறைந்தவர்கள் என்று நூற்றுக்கணக்கான சம்பவங்கள் நடைபெற்றுவந்தன.

ஆயினும், அண்மையில் இங்கு ஒருபெரும் மாற்றம் ஏற்பட்டது. தென்னாபிரிக்க மக்கள் தம்மைத் தாமே ஆட்சிசெய்ய உரிமை பெற்றார்கள். ஆட்சி சிறுபான்மையினரிடமிருந்து பெரும்பான்மையினருக்கு மாறியது. இது ஒரு பெரும் புரட்சிகரமான மாற்றம். இம்மாற்றம் ஏற்பட பல இயக்கங்கள் வெளிநாடுகளிலும், குறிப்பாக மேல் நாடுகளிலும் தொடர்ச்சியாக இயங்கி வந்ததை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஒப்புரவு

நாடுகளிடையே போர் நடைபெற்று தீர்வுகள் கண்ட பின்னர் அதே நாடுகளிடையே ஒப்புரவு நடைபெறுவது வழக்கமல்ல. அதேபோன்று நாட்டினுள் போர் நடைபெற்று தீர்வு கண்டபொழுதும் நாட்டினுள் போர் புரிந்த இரு சாரார் இடையே ஒப்புரவு ஏற்பட்ட வரலாறு இதுவரை இல்லையென்றே கூறவேண்டும். இந்நிலையை துணிவுடனும் உறுதியுடனும் தென்னாபிரிக்கா மாற்றியது. போர் முடிந்து, தீர்வு கண்டு, ஆட்சி மாறியதும் இனங்களிடையே ஓர் ஒப்புரவு தேவை என்று அம்முயற்சியில் பல பெரியார்கள் ஈடுபட்டார்கள். ஒரு சில முக்கியமானவர்களின் ஒத்துழைப்பு கிடைக்காவிட்டாலும், இந்த ஒப்புரவு முயற்சி வெற்றியளித்தது, பயன் அளித்தது என்று துணியலாம்.

இப்படிப்பட்ட ஓர் ஒப்புரவு நமது நாட்டிலும் தேவை. போருக்குத் தீர்வு கண்டதும் சமாதானம் தானாக வந்துவிடும் என்பது வெறுங்கனவு. இனங்களிடையே ஒப்புரவு தேவை. செய்த பெருந் தவறுகள், கொலைகள், அழிப்புக்கள், கொள்ளைகள், கற்பழிப்புக்கள், இடப்பெயர்வுகள் அடையாளங் கண்டு அவற்றிற்குப் பொறுப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மன்னிப்பும் கேட்கப்படுமானால் சமாதானத்துக்கு நாம் வழி வகுத்தவர்களாவோம்.

இப்பெரும் பணி மனிதத்தன்மையுடனும், பொறுமையுடனும், உறுதியுடனும், மென்மையுடனும் நடைபெறுதல் அவசியம். ஏற்கனவே கூறியதுபோல மதத் தலைவர்கள், துறவிகள், பெரியோர் இப்பணியில் ஈடுபடுதல் அவசியம். நாளேடுகள், வாரஏடுகள் இப் பணியில் தம்மை ஈடுபடுத்தல் வேண்டும். காவலனும் இப்பணியில் தன்மை ஈடுபடுத்தும் என்று எதிர்பார்ப்போம். வானொலி, தொலைக்காட்சியும் தமது பங்கை அளிக்கவேண்டும். நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் நாம் இப்பெரும் பணியில் ஈடுபட்டே ஆகவேண்டும். புத்தாயிரத்தில் நாம் செய்யத் தொடங்கும் ஒரு பெரும் பணியாக இது அமையும்.

தென்னாபிரிக்காவையும் மீறி, நமது நாட்டில் நாம் செய்யவேண்டிய இன்னுமோர் ஒப்புரவு உண்டு. அதாவது இனங்களிடையே மட்டுமல்ல, தமிழினத்துக்குள்ளும் ஓர் ஒப்புரவு அவசியம். இனத்துக்குள் போராட்ட காலத்தில் பல கொலைகள், பகைமைகள், களவுகள், சித்திரவதைகள் நடந்துள்ளன. ஒரு பழமை வாய்ந்த பண்பாடு, ஒரு குறுகிய காலத்தில் சின்னாபின்னமாக்கப்பட்டு விட்டது. ''துவக்குக் கலாச்சாரம்'' ஒன்று உருவாகிவிட்டது. கண்டதற்கும் கொலை. துவக்குப் பலத்தி[illegible] நியாயப்படுத்தும் ஓர் ஆணவம் – என்று பல. இப்படிப்பட்ட ஓ[illegible] தீர்வு வந்தும் விடுதலையற்ற வாழ்வு பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலை. பானையில் இருந்து தப்பி, நெருப்புக்குள் விழுந்த நிலை. பதினாறு நீண்ட ஆண்டுகளாக நொந்து நொருங்கிய மக்களுக்கு சமாதானம், அமைதியான வாழ்வு அவசியம். இதற்கு இனத்துக்குள்ளும் ஒப்புரவு அவசியம்.

ஆன்மீகம்

விடுதலை, நீதி, சமாதானம், ஒப்புரவு இச் சொற்கள் இயல்பாகவே ஓர் ஆன்மீகத்தை கோடிட்டுக் காட்டுகின்றன. கயவர்களும், கள்ளர்களும், கொலைஞர்களும் இச் சொற்களைக் கண்டபடி உளறிய காரணத்தினால் ஒருவேளை மக்கள் மத்தியில் இச்சொற்கள் தன்னுள் கொண்ட ஆன்மீகத் தன்மையை இழந்திருக்கலாம். தவறு மக்கள் இழந்திருக்கலாம் சொற்கள் இழக்கவில்லை. நான் இங்கு குறிப்பிடும் ஆன்மீகம், நிறுவனங்களுக்குள் சிறைப்பட்டுவிட்ட மதங்களுக்கு மேற்பட்ட ஒரு மனித ஆன்மீகம். மதங்கள் இயல்பாக இப்படிப்பட்ட ஓர் ஆன்மீகத்தை வளர்க்க வேண்டும். ஆனால், நிறுவனமயமாக்கப்பட்ட மதங்கள் நிறுவனங்களையும், கட்டுக்கோப்பான அமைப்புக்களையும் வளர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருக்கின்றன. அதனால், எந்த ஆன்மீகத்தை வளர்க்க மதங்கள் உண்டோ, அதே ஆன்மீக வளர்ச்சிக்குத் தடையாக, முட்டுக்கட்டைகளாக மதங்கள் மாறுவதும் உண்டு.

ஆன்மீகம் என்று நான் இங்கு குறிப்பிடுவது நிறுவனமயமாக்கப்பட்ட மதங்களுக்கு அப்பால் வாழும் ஓர் இறை உறவு என்னுள் ஆழமாகச் சென்று (அகப் பயணம்) நான் எந்த இறைசாயலில் படைக்கப்பட்டேனோ அந்தச் சாயலைத் தொடும் ஓர் உறவு. இறைவனின் அன்பிற்கு என்னை முழுமையாகத் திறந்துவிடும் ஓர் ஆழமான ஆன்மீகம் (**Indepth Spirituality**) இந்த ஆன்மீகம் தன்னுள் சென்று தன்னலத்தில் புரள்வதல்ல. அன்றேல் காட்டுக்குப் போய் தவத்திலும் செபத்திலும் மூழ்குவதல்ல. மூரணாக, ஆழச்செல்லும் இந்த அகப்பயணம், அகலவிரியும் ஒரு புறப்பயணமாகவும் மாறும். மனித எல்லைகளைக் கடந்து அனைவரையும், அனைத்தையும் அரவணைக்கும் ஓர் ஆன்மீகம். வேரூன்ற, கிளைகள் விரிக்கும் ஓர் ஆன்மீகம். இப்படிப்பட்ட ஓர் ஆன்மீகத்தை அடித்தளமாகக் கொண்டு மலர்ந்து காய்த்துக் கனியும் ஆன்மீகக் கனிகள்தான் – விடுதலை, நீதி, சமாதானம், ஒப்புரவு. இப்படிப்பட்ட ஓர் ஆன்மீகந்தான் இனங்களை, மதங்களை, நாடுகளை ஒன்றாக்கும். இப்படிப்பட்ட ஓர் ஆன்மீகம் எங்கள் நாட்டின் எதிர்காலத்துக்கு அவசியந் தேவை. இன்று விரைவாகப் பரவிவரும் உலகளாவிய பண்பாட்டிற்கும் இப்படிப்பட்ட ஓர் ஆன்மீகம் அவசியந் தேவை.

## எனது பார்வையில் பாதுகாவலன் பற்றிய விமர்சனங்கள் விளக்கங்கள்

### மறையாசிரியர் கி. மா. பங்கிராஸ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க கிறிஸ்தவ வார இதழான பாதுகாவலன் பத்திரிகை 125 ஆண்டுகள் எமது யாழ். மறைவாட்டத்தில் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. யாழ். மறைமாவட்டத்திலும், இலங்கையில் ஏனைய மறைமாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் தமிழ் பேசும் மக்களிடையே பல தலைமுறைகளாக அரும்பணியாற்றி வந்துள்ளமை பாராட்டுக்குரியது.

கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தைப் பாதுகாத்து வளர்ப்பதை நோக்காகக்கொண்டு பாதுகாவலன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்தவ மறை உண்மைகளை விளக்கிக் கட்டுரைகள், கவிதைகள், கதைகள் என்று பல அம்சங்களை உள்ளடக்கி வெளியிடப்பட்டது. அனுபவமிக்க அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள், வினாக்களுக்கு விடைகள், மூட நம்பிக்கைகளைத் தகர்க்கும் தர்க்க ரீதியான விளக்கங்களைக் கொண்டிருந்தது சிறப்பம்சமாகும்.

பாதுகாவலனில் வெளியிடப்பட்ட பல விடயங்கள் ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதற்கு ஆதாரமாகவும் இருந்துள்ளது. இவ்வாறு உயர்வு நிலையில் இருந்து பத்திரிகை இடைக்காலங்களில் தளர்வு நிலையை அடைந்தமை கவலைதரும் விடயமாகும். அநேக மக்களின் உள்ளங் கவர்ந்த பத்திரிகையாக இருந்த பாதுகாவலன் வாசகர்களின் எண்ணிக்கையில் குறைவடைந்தமை பத்திரிகையின் தளர்வுநிலையை வெளிக்காட்டுவதாக இருந்தது. ஏனைய பத்திரிகைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய நிலையை இழந்தமை கசப்பான உண்மையாகும்.

அண்மைக்காலங்களில் இப்பத்திரிகை புதுப் பொலிவுடன் கவர்ச்சிகரமாக வெளிவருவது மகிழ்ச்சி அளிப்பதாகும். இக்காலத்தில் வெளிவரும் பல பத்திரிகைகள் போன்று அழகிய கவர்ச்சிகரமானதாகப் பாதுகாவலனும் திகழவேண்டும் என்பதே எம் ஆவலாகும். புதுமையும் பொருள்செறிவும் கொண்டு வெளிவருவது இன்றியமையாததாகும்.

கத்தோலிக்க ஏடுகள் ஊக்குவிக்கப்பட்டு வளர்க்கப்படவேண்டும் என வத்திக்கான் சங்கம் "சமூகத் தொடர்புக் கருவிகள்" என்ற தீர்மானத் தொகுப்பில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. கிறிஸ்தவ உணர்வில் வாசகர்களை வளரச்செய்ய உண்மையான கத்தோலிக்க வெளியீடுகளை நிறுவி வளர்க்க வேண்டும். திருச்சபை அதிகாரிகளாகவோ, கத்தோலிக்க மக்களாலோ ஊக்குவிக்கப்பட்டும், அவர்களைச் சார்ந்துமிருக்கும் இவ்வெளியீடுகள், இயற்கைச் சட்டத்திற்கும் கத்தோலிக்க கோட்பாடுகளுக்கும், கட்டளைகளுக்கும் இயைந்தவாறு பொதுமக்களின் கருத்துக்களை உருவாக்கி, உறுதிப்படுத்தி வளர்ப்பதோடு, திருச்சபைச் செய்திகளைப் பரப்பி, அவற்றுக்கு ஏற்ற விளக்கம் தரவேண்டும். எல்லா நிகழ்ச்சிகளையும் கிறிஸ்தவக் கண்ணோட்டத்துடன் பார்த்து முடிவு செய்வதற்குக் கத்தோலிக்க வெளியீடுகளைப் படிப்பதும், பரப்புவதும் இன்றியமையாதவை என விசுவாசிகளுக்கு உணர்த்தவேண்டும். (ச.க. எண். 14)

நற்செய்திப் போதகப் பணியிலும், கத்தோலிக்க மக்களின் விசுவாச வாழ்வை ஊக்குவித்து வளர்ப்பதிலும் கத்தோலிக்க பத்திரிகை என்ற மட்டில் பாதுகாவலனுக்குப் பெரும் பொறுப்பு உண்டு. மக்களின் இன்றைய வாழ்க்கைப் பிரச்சனைகளில் தெளிந்த சிந்தனையுடன் பக்கபலமாக நின்று ஊக்கமளிப்பதும் பெரும் கடமையாகும். கிறிஸ்து எவ்வாறு முழுமனித நலனில் அக்கறைகொண்டு புதிய ஓர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப பணிபுரிந்தாரோ அவர் வழிநின்று நற்சமுதாயத்தைக் கட்டியெழுப்பப் பாடுபடவேண்டும்.

எனவே காலத்தின் தேவைக்கேற்ப மக்கள் மயமாக்கப்பட்டதாக அவர்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து, சமுதாயத்தின் எல்லாத் தரத்தினருக்கும் ஏற்றவாறு பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி வெளிவர எல்லோரும் இணைந்து பாடுபடுவோம். பத்திரிகை தரமுடனும் [illegible] ஆசிரியர் குழு அமைவதும், எழுத்தாளர்கள் பயிற்றப்படுவதும், கூட்டுப் பொறுப்புடன் செயற்படுவதும் வேண்டப்படுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வம் எவரெவர்க்கு வாழ்வு அளிக்கச் சித்தம் கொண்டுள்ளதோ அவரவர்களே வாழ்வில் வெற்றி பெறுவர்

சிறுகதை
தவம் குருசுமுத்து

அதுவோர் கிராமம் என்றும் சொல்வதிற்கில்லை. நகரமென்றும் சொல்வதற்கில்லை. இடைப்பட்ட நிலை. அத் தெருவீதியிலே பிச்சைக்காரர் இருவர் தம் வயிற்றுப் பிழைப்புக்காக கையேந்தும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள்தான் சவரியும் ஏனோக்கும். இவர்கள் இவ் இரத்தல் தொழிலில் ஈடுபட்டு வருவது இன்று நேற்று அல்ல. சுமார் 8 ஆண்டுகளைத் தாண்டிவிட்டன. இதனால் இவர்கள் இருவரும் ஒருவர் சுமைகளை மற்றவர் தாங்கி நிற்கும் சுமை தாங்கிகளாகவும் மாறிவிட்டனர். ஏனோக்கு இறைவனில் ஆழ்ந்த விசுவாசமும், பிரமாணிக்கமும் கொண்டுள்ளதால் அடிக்கடி இறைவனையும் அவரின் மகிமையையும் தன் சக நண்பனுக்கு எடுத்துக் கூறியபடியே இருப்பான். ஆனால் சவிரியோ, ஏனோக்கை ஏளனம் செய்து, இறைவன் எங்குள்ளார், அவர் இருந்தால் நாம் இந்நிலைக்குத் தள்ளப்படுவோமா? என்று அடிக்கடி இறைவனைக் குறைகூறிய வண்ணம் இருப்பான். ஏனோக்கு பிச்சை எடுக்கும் வேளையில் தெய்வம் எவரெவர்க்கு வாழ்வு அளிக்கச் சித்தம் கொண்டுள்ளதோ அவர்களே வெற்றி பெறுவர் எனக்கூறிக் கொள்வான்.

இது இவ்வாறிருக்க, ஒருநாள் அவ்வூர் அரசன், தன் ஆளுமையின் கீழ் வதியும் மக்களின் நிலைப்பாட்டை அறிய விரும்பி, வேற்றுருவத்திலே வீதியிலே வலம் வந்து கொண்டிருந்தான். அந்நேரம் ஏனோக்கு, சவரி என்ற இரு பிச்சைக்காரர்களையும் காணவேண்டிய சந்தர்ப்பம் வந்தது. அவர்கள் இருவரின் வாயிலிருந்து வந்த சில வாக்கியங்களையும் கேட்க முடிந்தது. ஏனோக்கு என்பவன் ''தெய்வம் எவரெவர்க்கு வாழ்வு அளிக்கச் சித்தம் கொண்டுள்ளதோ அவரவர்களே வாழ்வு பெறுவர் என்றும்'', சவரி ''அரசன் எவரெவர்க்கு வாழ்வு அளிக்கச் சித்தம் கொண்டுள்ளானோ அவர்களே வாழ்வில் வெற்றி பெறுவர்'' என்றும் கூறிக் கொண்டனர்.

இவ்விரு வார்த்தைகளுக்கும் நன்கு செவிமடுத்த அரசன் தன் அரண்மனை சென்று, ஏவலாளர்களிடம் சில உரொட்டிகளைச் செய்து, அதற்குள் பொற்காசுகளையும், தங்க நகைகளையும் வைத்து வீதியிலே, ''அரசன் எவனுக்கு வாழ்வளிக்கச் சித்தம் கொண்டுள்ளானோ அவனே வாழ்வு பெறுவான்'' எனக் கூறிப் பிச்சை எடுக்கும் மனிதனிடம் அளித்து வரும்படி கூறினான். ஏவலாளர்களும் அரசன் கூறியபடியே செய்தனர்.

மீண்டும் மறுநாள் மன்னன் வீதியிலே வலம் வருகையில் இரு பிச்சைக்காரர்களில் ஒருவரான சவரியை மட்டும் காணமுடிந்தது. அரசன் பலவாறு சிந்தித்துவிட்டு பிச்சைக்காரனான சவரியை அழைத்து ''நேற்று நான் உன்னிடம் கொடுக்குமாறு சில உரொட்டிகளை அனுப்பி வைத்தேனே! அவற்றை என்ன செய்தாய்?'' என வினாவினான். சவரி அதற்குப் பதிலாக ''அரசே அவ்வுரொட்டி என் கையில் கிடைத்ததும், அது மிகவும் பாரமாக இருந்தது. உரொட்டி சரியான விதத்தில் தயாரிக்கப்படாமல் அவியாது இருந்ததால், அதை நான் உண்ண விரும்பாமல் என் சக நண்பன் ஏனோக்கிடம் கொடுத்துவிட்டேன்'' என்றான்.

மன்னன் திடுக்குற்று, ஏதும் பேசச் சக்தியற்று வந்த வழியே திரும்பினான். ஆனால் அவன் காதுகளில் ''தெய்வம் எவரெவர்க்கு வாழ்வு அளிக்கச் சித்தம் கொண்டுள்ளதோ அவர்களே வாழ்வில் வெற்றி பெறுவர்'' என்று வார்த்தைகள் ரீங்காரம் செய்தன.

# பானையில் இருந்தால்தான்...

அருள்திரு அன்ரனிபாலா

## (உள்ளத்தின் நிறைவில் நின்றே வாய் பேசும்)

சென்ற இதழ் தொடர்ச்சி...

உலகியல் வார்த்தை நயங்களையும் கொண்ட பாடல்களாகவும் அமைந்து விடுகின்றன.

இந்த வகையில் விடியலின் கீதங்கள் பாடல் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் ஒரு சில பாடல்களை அர்த்தமுள்ள பாடல்களாகக் குறிப்பிடலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. அன்பினில் இணைந்த | (01) | 2. அர்ச்சனை மலராக | (02) |
| 3. அஞ்சாதே அஞ்சாதே | (44) | 4. இதயம் மகிழ்ந்து | (93) |
| 5. இதுவே நேரம் | (94) | 6. எதை நான் தருவேன் | (95) |
| 7. ஏற்றருள்வீர் இறைவா | (101) | 8. இறைவன் தரும் அன்பு | (126) |
| 9. உங்களுக்காக கையளி | (132) | 10. என் ஆயன் யேசு | (133) |
| 11. என் ஆன்ம உணவே | (134) | 12. செம்மறியின் விருந்துக்கு | (145) |
| 13. தியாக தீபம் யேசுவின் | (147) | 14. நானே வானினின்று | (153) |
| 15. வானக விருந்தே | (159) | 16. இந்நாள் வரையில் | (168) |
| 17. ஒவ்வொரு நாளும் | (169) | 18. அமைதியின் தெய்வமே | (202) |
| 19. தியாகத் தருவே | (148) | 20. நீங்கள் என் சாட்சிகள் | (204) |

திருவழிபாட்டிற்கு அப்பால் வீடுகளிலும், வேறு நிகழ்வுகளிலும், தனியாகவும் பாடக் கூடிய மறைக்கருத்தாழம் குறைந்த விவரணப்பாடல்களும் உண்டு. எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:-

| | | | |
|---|---|---|---|
| 1. எனக்காகப் பலியாகும் | (100) | 2. என்யேசு நாயகா | (138) |
| 3. எனில் வாரும் என் யேசுவே | (139) | 4. கருணை தேவனே | (144) |
| 5. தாகம் தணிக்கும் தலைவா | (146) | 6. பொன்னான நேரம் | (157) |
| 7. அன்பென்னும் சுரங்கள் | (164) | 8. இதயமே எழுந்திடும் | (167) |

இவ்வாறு அநேக பாடல்கள் இக்காலத்தில் கருத்தாழம் குறைந்த பாடல்களாக வெளிவருவதற்கு பாடல் ஆக்குனர்களின் மறையறிவு அற்ற தன்மையே காரணமாக அமைந்து விடுகின்றன. எனவே பாடல் தேர்வில் கூடிய கவனம் செலுத்துவதற்கு விசேடமாக திருஇசைக் குழு அங்கத்தவர்கள் மறையறிவு பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

### 1.2. பாடல் தேர்வு

அர்த்தமுள்ள பாடல் தெரிவு என்பது திருவழிபாட்டு ஆண்டுக் காலங்களுக்கும் திருவழிபாட்டு மையக்கருத்துகளுக்கும் அமைந்த பாடல்களைத் தெரிவுசெய்து பாடுவதாகும். திருவழிபாட்டு ஆண்டுக் காலங்கள் என்பது, திருவருகைக் காலம், கிறிஸ்து பிறப்புக்காலம், பொதுக்காலம், தபக்காலம், பாஸ்காக்காலம் என்பவையாகும். முன்னைய காலங்களில் அச்சிடப்பட்ட பாடப் புத்தகங்களில் கத்தோலிக்க கீர்த்தனை மாலை (*ஆதாரம் 1962-4-1 பாதுகாவலன் இதழ்*) இறைவனைப் புகழ்வோம் (*ஆதாரம் 1971-3-6 பாதுகாவலன் இதழ்*) போன்றவற்றிலும் அதனைத் தொடர்ந்து வெளிவந்த ஒரு சில புத்தகங்களிலும் இந்த ஐந்து காலப்பிரிவுகளுக்கு ஏற்றவகையில் பாடல்கள் அமைந்திருந்தன. ''ஏன் இன்னும் தாமதம் இறைவா'', ''கலங்கரைச் சுடரே வாராய்'', என்னும் பாடல்களை திருவருகை காலத்திலும், ''தவறாயிரம் நான் செய்தாலும்'', ''மனிதனே நீ மண்ணாக'' என்னும் பாடல்களைத் தபக்காலத்திலும், ''மண்ணில் பூத்த'', ''எழுந்திடாய் உலகமே'' என்னும் பாடல்களை கிறிஸ்து பிறப்புக் காலத்திலும், ''மூவுலக இராஜேஸ்வரன்'', ''சாவு வீழ்ந்தது'' என்னும் பாடல்களை பாஸ்காக் காலத்திலும் முன்பு பாடியபோது அவை அந்த அந்தக் காலங்களுக்குரிய வழிபாட்டு உணர்வினை இறைமக்கள் மனதில் நிலைநிறுத்த உதவின. எனவே இன்றும் திரு இசைக் குழுவினது காலத்திற்கேற்ற கருத்திற்கமைந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடுவது அவசியம்.

மேலும் திரு இசைக்குழு அங்கத்தவர்கள் திருவழிபாட்டின் மையக்கருத்திற்கு ஏற்ற பாடல்களைத் தேர்ந்தெடுத்துப்பாட வேண்டும். அழைப்பு, விசுவாசம், செபம், குடும்பம், இளையோர், சிறுவர், மனமாற்றம், இறைவார்த்தை, அருட்சாதன ஆயத்தம், சாட்சிய வாழ்வு, இறந்தோர் வேண்டுதல், நன்றிகூறுதல் போன்ற பலவிதமான மையக் கருத்துக்களின் அடிப்படையில் வழிபாடுகள் இடம்பெறும்போது பாடல்களும் அவற்றிற்கேற்பவே தெரிவுசெய்யப்படவேண்டும். வழிபாட்டுக் கருத்துக்கள் வேறாகவும் பாடல்களின் கருத்துக்கள் வேறாகவும் அமைந்தால் இறைமக்கள் மனம் ஒன்றித்து வழிபாட்டில் பங்கெடுக்க முடியாது. திருவழிபாடும் அர்த்தமற்றதாகிவிடும்.

எமது யாழ். மறைமாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல ஆலயங்களில் உள்ள திருஇசைக்குழு அங்கத்தவர்கள் திருவழிபாட்டுப் பாடல்களைத் தெரிவுசெய்வதில் மறையறிவுத் திறமை அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். ஏனெனில் சிறுவயதில் முதல்நன்மை, உறுதிப்பூசுதல் பெறும் வேளைகளில் அவர்கள் பெறும் சொற்ப, அந்தந்த தேவைக்கேற்ப மறையறிவைத் தவிர வேறு வழிகளில் ஆழமான மறையறிவை திரு இசைக் குழுவினர் பெறுவது குறைவு. ஆழமான மறையறிவு இருந்தால்தான் மேற்கூறியவாறு திருவழிபாட்டுக் காலங்களுக்கேற்ற, மையக்கருத்திற்கமைய அர்த்தம் பொதிந்த பாடல் தெரிவுகளை மேற்கொள்ள முடியும்.

### 1.3. இசையறிவும் பயிற்சி

இசையறிவு என்னும்போது திருவழிபாட்டுப் பாடல்களுக்கு இசையமைப்பவர்களும், இசைப் பயிற்சி வழங்குபவர்களும் சிறப்பாக திருஇசை குழு அங்கத்தவர்களும், இசைக் கருவி மீட்டுபவர்களும் சிறந்த இசைஞானம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். விசேடமாக திரு இசைக்குழு அங்கத்தவர்கள் பாடல்களைக் கனிவு, அசைவு, ஏற்ற இறக்கங்களோடு பாடக்கூடிய விதத்தில் குரல் வளம் அமையப் பெற்றிருப்பது இன்றியமையாததாகும். இறைமக்கள் அனைவரும் தமக்கு இறைவன் வழங்கிய குரலால் பாடி இறைவனைப் புகழ வேண்டும். ஆயினும் அவர்களை வழி நடத்தவேண்டிய திருஇசைக் குழு அங்கத்தவர்கள் குரல் வளமுடையவர்களாய் இருப்பது அவசியமாகும். பல இசைக் குழுக்களை நோக்கும்போது எங்காவது ஒரு சில அங்கத்தவர்களே சிறந்த குரல் வளம் அமையப் பெற்றிருப்பர். ஏனையோர் சுமாரான குரல் வளம் உடையவர்களாகவே காணப்படுவர். மிகவும் தனித்துவமான இனிய, அதே வேளையில் ஏனைய குரல்களுடன் ஒத்திசைவு காணப்படமுடியாத குரல் வளம் அமையப்பெற்ற ஒரு சிலர் தம்மை முதன்மைப்படுத்தி ஓரளவு குரல் ஒத்திசைவு உள்ள ஏனையோரைப் புறக்கணிப்பதையும், தாமே ஒலிவாங்கிக்கு முன்னால் நிற்க வேண்டும் என அந்த அங்கத்தவர்களும், அவர்கள்தான் முதன்மையாக நிற்கவேண்டும் எனப் பெற்றோர், உறவினர் விரும்புவதையும், இத் தற்புகழ்ச்சி காரணமாக குழுவைவிட்டு விலக முடியாமல் நீண்டகால, நிரந்தர அங்கத்துவத்தைத் தக்கவைத்து வழிபாடுகளைக் குழப்புவதையும் நாம் காணலாம். இதனால் யாழ். மறைமாவட்ட மண்ணில் கடந்த கால பல ஆலய வரலாறுகள் தலைக்கனமும், பொறாமை நிறைந்த போட்டியும், பிரிவினைக் கட்சி மனப்பான்மைகளும் உருவாகிக் கறைபடிந்தவைகளாக பல தசாப்பதங்களாக தொடர்கதையாகி இன்றும் மறையாமல் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இவை தவிர்க்கப்படவேண்டும்.

எனவே குரல் வளம் மட்டும் இருந்தால் போதாது. திரு இசைக்குழு அங்கத்தவர்கள் அனைவரது குரல் ஒத்திசைவும் புரிந்துணர்ந்து விட்டுக் கொடுத்துப் பாடுவதும் அவசியமானது. குரல்களின் ஒத்திசைவு ஏற்பட வேண்டுமாயின் ஒழுங்கான பாடப்பயிற்சி தேவை. ''பாடப்பாட இராகம்; மூடமூட ரோகம்'' என்னும் பழமொழி கூறுவதுபோல் பாடப்பாடத்தான் குரல் ஒத்திசைவும் இனிமையும், இசைக் கருவிகளுடானான குரல்களின் இணைவும் ஏற்படும். இதன் காரணமாக திருஇசைக் குழு அங்கத்தவர்கள் ஒழுங்காக காலக்கிரமமாகப் பயிற்சி செய்து குரல் வளமும், குரல் ஒத்திசைவும், தமக்கிடையே நல்லுறவும் வளர்க்கவேண்டும். சில இடங்களில் பாடல் பயிற்சிக்கு வராத அங்கத்தவர்கள் ஆலய வழிபாடுகளில் தம்மை முதன்மைப்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். எனவே திருஇசைக் குழு அங்கத்தவர்களிடையே குரல் ஒத்திசைவு ஏற்படுவது மிகவும் இன்றியமையாததாகும்.

### பக்திக்குத் துணை போகும் கர்நாடக இசை

யாழ். மறைமாவட்டத்தைப் பொறுத்த வரையில் இன்று கர்நாடக இசையின் அவசியம் மிகவும் உணரப்படுகின்றது. எமது இளையோர் சமூகம் கர்நாடக இசையைக் கற்பதில் இன்று ஆர்வம் காட்டி வருகின்றனர். ஏறக்குறைய முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பிருந்தே (1960 களிலிருந்து) இந்தியாவின் குருத்துவக் கல்லூரிகளில் பயிற்சி பெற்று இன்று எம் மத்தியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் குருக்கள் வழியாக எமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பண்பாட்டு மயமாக்கலின் ஓர் அம்சமான கர்நாடக இசையில் அமைந்த பாடல்களே பெரும்பாலும் எமது யாழ். மறைமாவட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத் தூரநோக்குடைய இந்தியக் குருத்துவப் பயிற்சியினால் எம்மத்தியில் வந்துசேர்ந்த பக்திக்குத் துணைபோகும் கர்நாடக திருஇசை மரபை வளர்ப்பதில் மறைமுகமாகத் துணைநின்ற மறைந்த யாழ். ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையை நாம் மறந்துவிடமுடியாது. இவரது தூரநோக்குக் காரணமாகவே 1968ம் ஆண்டு தொடக்கம் இத்துறையில் மறைப்போதகர் இசைத் தென்றல் ம. யேசுதாசன் யாழ். மறைமாவட்ட ரீதியிலும் பல பங்குகளிலும் பணியாற்றி வருகின்றார்.

இப்போதும் கூட நாம் பயன்படுத்தும் பாடல்களுள் பெரும்பாலானவை, அதாவது 90 வீதமானவை கர்நாடக இசையின் இராகங்களில் அமைந்தவையாகவே காணப்படுகின்றன. எதிர்காலத்திலும் இந்நிலையே வளர்ச்சியடையும் என்பதில் ஐயமில்லை. கர்நாடக இசையில் எமது திரு இசைப்பாடல்கள் பல அமைந்துள்ளன என்பதற்கு பின்வரும் ஒரு சிலவற்றை எடுத்துக்காட்டாக, (இராகத்தின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப்படுகின்றன) கூறலாம் :-

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கற்றல் கற்பித்தல் முறைகளை மையப்படுத்தி 1999இலும் 2001இலும் பயிற்சிபெற்ற மறையாசிரியர்களுக்கு 2001புரட்டாதித் திங்கள் 14ஆம் 15ஆம் 16ஆம் திகதிகளில்

# யாழ். மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் பட்டுத்தெறித்த கருத்துக் களஞ்சியங்கள்

மறையாசிரியர்கள் சார்பாக
சூ. மேர்சி சுஜந்தினி

முதல்நாள் மன்றில் மறை ஆசிரியர்கள் அழைப்பும் பணியும் அவரவர் மனக் கண்ணாடியில் பார்த்து நிஜத்தை வெளிக்கொணர வாய்ப்பு அளிக்கப்பட்டது. திருமுழுக்கின் வழி நான் அழைக்கப்பட்டிருக்கின்றேன். நற்செய்தி அறிவித்தல் எனது கடமை. இப் பணி நான் பெற்ற பெருங்கொடை. மறைக்கல்வி கற்பிப்பதால் பங்கிற்கும், திருச்சபைக்கும் பணிசெய்து, கிறிஸ்துவின் பணியில் பங்குகொள்கின்றேன். நான் உருவாகி உருவாக்கல் பணியில் ஈடுபட்டு சமுதாயத்தை நல்வழிப்படுத்துகின்றேன். இப் பணியை நான் மகிழ்ச்சியோடு செய்கின்றேன். இப் பணியை இன்னும் நிறைவாக செய்ய வரும் தடைகளும், சவால்களும்தான் என்ன? நவீன உலகின் தொடர்பு சாதனங்கள் குறிப்பாகத் தொலைக்காட்சி நிகழ்வுகள் – மற்றப் பாடங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற கவனமும், முன்னுரிமையும் மறைக்கல்விப் பாடத்திற்குக் கொடுக்கப்படாமை, மூத்த மறையாசிரியர்கள், இளைய மறையாசிரியரை ஏற்றுக்கொள்ளாமையும் இடம்கொடுக்க மறுத்தலும், பெற்றோரின் அக்கறையின்மையும், பிள்ளைகளின் உதாசீனப்போக்கும் கற்பித்தலுக்கான வளமான சூழல் கற்பித்தல் உபகரணங்களின் வறுமை – பங்குத்தந்தையின் ஊக்குவிப்பில் வறட்சி இக் கருத்துக்கள் மெல்லெனச் சொன்னவை.

### மறையாசிரியர் யார்?! அவரது பணி எங்கே?!! எப்போது?!!!

யாருக்கு என்ற வினாத் தொடரில் அருட்சகோதரி யுஸ்ரீனா (தி.கு.க) சங்கென முழங்கி மறையாசிரியர்களின் உள்ளுணர்வில் புத்துணர்வூட்டினார். ஒரு மறையாசிரியர் கருவில் உருவாகும்போதே 'ஆம்' என்று பதில் கொடுத்தவர். இறைவன் படைத்து பெயர் பொதிந்து, அர்ச்சித்து, வழிநடத்தி தம் அன்பை, பிரமாணிக்கத்தை வெளிப்படுத்தி அதைப் பிறருக்குக் கொடுக்க விசேடவிதமாக அழைத்திருக்கின்றார். உருவாகி, ஏனையோரையும் உருவாக்குபவர் மறையாசிரியர். இயேசு தந்த விழுமியங்களை வாழ்வில் வாழ்ந்து இயேசுவின் கரம் பற்றி பணி செய்பவர் மறையாசிரியர். இந்தப் பணி சிறியவர், இளையோர், முதியோர் எல்லோருக்கும் கிட்டவேண்டிய பணி. உத்தானமான கிறிஸ்துவை உள்ளத்திலே தாங்கி கிறிஸ்துவின் மனநிலைலக்கொத்த புதிய உலகம் படைப்போம் – இதுவே நமது அழைப்பு – பயனுள்ள விதத்தில் முதல்நாள் முடிய இரண்டாம் நாள் இனிதே புலர்ந்தது.

இன்றைய நாளின் நிகழ்வுகளை அருள்திரு ஜெபரட்ணம் நெறிப்படுத்தினார். ஒரு கிறிஸ்தவன் பின்பற்ற வேண்டிய பத்துக் கற்பனைகள் போல – ஒரு மறையாசிரியர் சிறந்த கற்பித்தலுக்காக பின்பற்ற வேண்டிய முறைகளைப் பத்துக் கற்பனைகளாக மறையாசிரியர் முன் வைத்தார்.

### மறையாசிரியர் கடைப்பிடிக்க வேண்டி பத்துக் கற்பனைகள்

1. பாடங்களைக் கவனத்துடன் வாசி
   * படிப்பிக்கப் போகும் விடயத்தினை முழுமையாக வாசி
   * உள்ளடக்கத்தை நன்றாக விளங்கிக்கொள்
   * கையாளப் போகும் படிமுறைகளை மனதிலே வரிசைப்படுத்து
   * பிள்ளைகளுக்குக் கொடுக்கவிருக்கும் விடயத்தினை நன்றாகத் தியானி
   * தேவையான உபகரணங்களை ஆயத்தம் செய்
2. உன்னுடைய மாணவர்களின் தேவைகளை பிரச்சினைகளை, போராட்டங்களை நன்கு அறிந்துகொள்வாயாக
3. உனது மாணவர்களின் குரலுக்கு நன்றாக செவிகொடுப்பாயாக
   * மாணவர்களையும் பேசவிடுங்கள்
   * உடல் மொழிகளைக் கவனியுங்கள்
4. திறந்த மனப்பான்மையோடு இருப்பாயாக
   * அனுபவங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்
   * மாணவர்களின் கருத்துக்கள், உணர்வுகள் உனக்கு ஒத்துவராவிட்டாலும்கூட அவற்றை ஏற்றுக்கொள். உதாசீனம் செய்யக்கூடாது.
   * தெளிவில்லாத நிதானமில்லாத தவறான கருத்துக்களுக்கு சவால்விட ஆயத்தமாக இரு.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

### நாட்டிடுவாய் சமாதானக் கோலை

விண்ணக மண்ணக தொடர்பாடலே செபமாலை
எண்ணிய வேண்டுதல் நல்கிடும் வலிமைமிகு அருள்மாலை
புண்ணிய முனிவனாம் சாமிநாதருக்கருளினால் அக்காலை
கன்னியே காத்திடு கைபற்றினோம் நின் காலை

வெண்கதிரோனே நீர் போர்த்திட பொன் சேலை
பண்பாடிக் கூடிப் போற்றுவதே எம் வேலை
கண்மணி யேசுவை வெகுமதி தந்தாய் கல்வாரி மலை
வன்பகை நீங்க நாட்டுவாய் சமாதானக் கோலை

வேளை நகரில் கனிந்தாய் கலம்பொங்க பசும்பாலை
ஏழை முடவன் எழுந்திட கொடுத்தாய் புதுக்காலை
கோழையாய் கொலுவிழந்து கரும்பானோம் பெரும் ஆலை
தாழைப் பணிந்திட்டால் தந்திடுவாய் மேன்நிலை

பாவவாழ்வு மாய படித்திடுவோம் இறைநூலை
நவலோக நாயகி பரிந்துரைப்பாய் மகன் மேலே
தவறாது புனைந்திடுவாள் பரலோகப் பூமாலை
செபமாலை தினமோதி சென்றிடுவோம் இறைசோலை

எஸ். யேசுதாஸ், கொழும்புத்துறை

புனித பத்திரிசியார் கல்லூரியில்மாணவர்களுக்கான கணனிக் கூடம் 21-09-2001 அன்று யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் திறந்து, கணனிகள் இயக்கிவைக்கப்படுகின்றன.





சென். பெனடிற் றோ.க.த.க வித்தியாலய புதிய கட்டடத்திற்கு அருள்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அழைத்துச் செல்லப்படுவதை முதலாம் படத்திலும், மாணவரின் பயன்பாட்டிற்கு புதிய கட்டடத்தை குருமுதல்வர் ஜே.பி.ஈ. செல்வராஜா அடிகள் ஆசீர்வதித்து ஆரம்பித்து வைப்பதை இரண்டாம் படத்திலும் காணலாம்.




மாணவர்களுக்கு ஆயர் அவர்கள் கணனிப் பாவனையை அறிமுகப்படுத்துவதினை படத்தில் காணலாம்.

# நற்செய்திப் பெருவிழாவும் மாபெரும் குணமாக்கும் வழிபாடும்

''யேசுவே ஆண்டவர்'' மாத சஞ்சிகையின் ஆசிரியரும் மாபெரும் குணமாக்கும் வழிபாட்டின் புகழ்பெற்ற வீ. இக்னேசியஸ் அடிகளார் புரட்டாதி மாதம் 14, 15, 16ஆம் திகதிகளில் கொழும்பு வியாகுல மாதா ஆலயத்தில் தமது வழிபாட்டினை நடத்தினார். 3 வருடங்களின் பின்னர் இக்னேசியஸ் அடிகளார் மீண்டும் வருகை தந்தது இறைஇரக்கத்தின் மாபெரும் கொடையாகும்.

அடிகளாரின் நற்செய்தி உரைகளைக் கேட்கவும், அருள் ஒழுகும் அவர் திருவதனத்தை நேரில் காணவும், அவரது குணமாக்கும் வழிபாட்டின் மூலம் ஆன்ம சரீர நோய்களிலிருந்து விடுதலை அடையவும் பல தூர இடங்களில் இருந்தும் மக்கள் வெள்ளம் போல் திரண்டார்கள்.

புரட்டாதி 15ஆம் திகதி இரவு 9.00மணியிலிருந்து மறுநாள் காலை 6.15மணிவரை இத் திருவிழிப்பு பெருவிழாவாக நடைபெற்றது. இத் திருவிழிப்பானது வாழ்க்கையிலே மறக்க முடியாத திருவிழிப்பாகும். வியாகுலமாதா கோவில் பங்குத் தந்தை ஆனந்தன் பெர்ணான்டோபிள்ளை அடிகள் ஆலயத்திற்கு வெளியிலும், வீதிகளிலும் திரண்டிருந்த மக்களின் நலன் கருதி ஆங்காங்கே பல தொலைக்காட்சிப் பெட்டிகளை அமைத்திருந்தது அனைத்து மக்களும் இந் நிகழ்ச்சிகளில் நிறைவாகப் பங்குபற்ற முடிந்தது.

### இறைதரிசனத்தில் 1ஆம் ஆண்டு

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 03 – 04 – 1985 |  | 07 – 10 – 2000 |

## அமலதாஸ் கமிலஸ் கிறிஸ்ரி

தம்பீ! என்று உனையழைக்க
அருகிலே நீ இல்லைத்தான்
ஆறாத் துயருடன் இருந்த நாங்கள் – இன்று
உறுதியுடன் எழுந்து நின்று
வடிகின்ற கண்ணீரைத்
துடைத்து நிற்கின்றோம்
ஏனென்றால், நீ
இறைத் தரிசனத்தில் இருப்பாய் என்று
காரணம் ..... நீ
மக்களுக்காய் மடிந்தாயே
கோதுமை மணியைப் போல

இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு

அம்மா, அப்பா, அண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியட்நாம் குரு ''தேசாபிமானி''

வியட்நாம் அரசு நடத்திவரும் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பிரான்ஸிஸ்கன் குருவாகிய பொனவென்சர் திரான் வான்மான் ''தேசாபிமானி'' என வர்ணிக்கப்பட்டுள்ளார். ஏனெனில், அரை நூற்றாண்டு காலமாக தொழுநோயாளரைப் பராமரித்து வந்துள்ளார்.

85 வயதான இக் குரு தான்மை என்னும் கிராமத்தில் ஒரு தொழுநோயாளர் நிலையத்தை நிறுவி நடத்திவருகிறார். இவரை ''பொறுப்புணர்ச்சியுள்ள தேசாபிமானி''என அத் தொலைக்காட்சி வர்ணித்தது.

## கலை நிலா அரங்கு

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் கடந்த யூன் மாதம் முதல் நடாத்தப்பட்டுவரும் மாதாந்த கலைநிலா அரங்க நிகழ்வின் செப்ரெம்பர் மாத நிகழ்ச்சியின்போது கும்மி, கோலாட்டம், குறத்தி நடனம், தனிப்பாடல் என்பவற்றுடன் சிறப்பு நிகழ்ச்சியாக புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் வழங்கும 'மன்னிப்பு' என்ற நாட்டுக்கூத்து இடம்பெறும்.

## நீண்டகாலம்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தது. அதன்பின்னர் அவர் சூடானில் ஆபிரிக்க மக்களுக்குப் பணியாற்றி வந்தார்.

அவரது அஞ்சாமையும் அயரா உழைப்பும் மலையக மக்கள் உள்ளத்தில் என்றும் நிலைபெறச் செய்துவிட்டன.

## பொதுநிலையினர் தினம்-25.11.2001

இவ்வாண்டுக்கான பொது நிலையினர் தினத்தை முன்னிட்டு ''பங்குத் திருச்சபையில் பொதுநிலையினராகிய நாம்'' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடாத்தப்படுகிறது.

ஆர்வமுடைய எல்லோரும் பங்குபற்றக்கூடிய இப் போட்டியில் 500 சொற்களுக்கு மேற்படாத ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆக்கங்களை பங்குத்தந்தையுடன் தொடர்புகொண்டு அவரூடாக 31.10.2001இற்கு முன்பதாக செயலர், பொதுநிலையினர் ஆணைக்குழு, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

முதல் மூன்று ஆக்கங்களுக்ும் ஏனைய தரமான ஆக்கங்களுக்கும் பரிசில் வழங்கப்படும்.

## திருத்தம்

15.09.2001 பாதுகாவலன் பத்திரிகையில் *சித்திரவதையானது இறைவனின் பார்வை யில் வெறுக்கக்கூடிய ஒரு செயலாகும்* என்னும் செய்தியில் சுவிற்சிலாந்தின் சித்திரவதைகளுக்கு எதிரான கத்தோலிக்க ஒன்றியத்தினால் **Association of Catholics Against Torture (ACAT)** என்ற சொற்பதம் தவறுதலாக சுவிற்சிலாந்தின் பயங்கரவாதத்திற்கு எதிரான கத்தோலிக்க ஒன்றியத்தினால் **Association of Catholics Agai-nst Terrorism (ACAT)** எனப் பிரசுரிக்கப்பட்டிருந்தது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

# தவத்திரு தோமஸ் அ.ம.தி புனிதர் பட்டத்திற்கான...



இலங்கை நாட்டில் யாழ். மறைமாவட்டத்தில் தோலகட்டி என்னும் இடத்தில் செப தப வாழ்விற்கான காட்சித் தியான சபையை நிறுவிய தவத்திரு வ.அ. தோமஸ் அ.ம.தி அடிகளாருக்கு 'புனிதர்' பட்டம் வழங்க கத்தோலிக்க திருச்சபை செவிமடுத்து அதற்கு வேண்டிய ஆதாரங்களுக்கான தகவல்களை அவரைத் தெரிந்தவர்களிடமிருந்து, அவரின் வாழ்வில் அவரைச் சந்தித்தவர்களின் அனுபவங்களையும், இவரின் மன்றாட்டின் வழியாக புதுமைகளைப் பெற்றவர்களிடமிருந்து அந்த விபரங்களையும் சேகரித்து வருகிறது.

இப் பணியை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் வழிநடத்தலில் செய்வதற்காக ஒரு மாதமளவில் செபமாலைத் தாசர் துறவு சபையின் இலங்கை மாகாண அதிபர் அ.ம.ஸ்ரீபன் செ.தா. அடிகளார் அருள் ஆச்சிரமம், 5கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இருப்பார்.

தவத்திரு தோமஸ் அடிகளாரைஅவரின் வாழ்வில் சந்தித்தவர்கள், இவரின் மன்றாட்டின்வழியாக இறைஆசீரை பெற்றவர்கள் நேரடியாகவோ, கடிதம் மூலமாகவோ தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றார்.

# புனித பத்திரிசியார் கல்லூரியில் கணனிக்கல்வி ஆரம்பம்

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கான கணனிக்கூடமும், கணனிக் கற்கைநெறியும் 21.09.2001 அன்று கல்லூரியின் முகாமையாளரான யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி ஆரம்ப நிகழ்வு கல்லூரியின் உபஅதிபர் ஜெறோ செல்வநாயகம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஆயர் அவர்கள் ''வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்ப உலகில் கணனிப்பாவனை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுவதினால் இக் கணனி அறிவை இடைநிலைப் பிரிவு மாணவரிடத்தில் இருந்து அறிமுகப்படுத்தி அவர்கள் கணனி தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு இக் கணனிகூடம் பெரிதும் உதவியாக அமையும்''.

மேலும் இக் கணனிக் கூடத்திற்கு இன்னும் சில கணனிகளை விரைவில் பெற்றுத்தருவதாகவும் கூறினார். இந் நிகழ்வில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர். இக் கணனிக்கூடம் யாழ். ஆயர் அவர்களது அயராத முயற்சியினால் குறுகிய காலத்தில் அமைக்கப்பட்டதோடு, கல்லூரி மாணவர்களுக்கு என முதன் முதலில் இக் கல்லூரியிலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உறுதியாக நிலைத்திருக்கும் மரியாயின் சேனை

''1921 செப்ரெம்பர் 7ஆம் திகதி மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டது. எத்தனையோ பக்திச் சபைகள் உருவாகி வளர்ந்து பின் தேய்ந்து மறைந்து போயிருக்கின்றன. ஆனால், 80 வருடங்கள் ஆகியும் மரியாயின் சேனை உடைந்துபோகாது நிலைபெற்று வளர்ந்து வருகிறது. இதற்குக் காரணம் அதன் கட்டுக்கோப்பும் திட்டவட்டமான ஒழுங்குகளும் கட்டுப்பாடுமே''.

யாழ். மாவட்ட கொமிற்சியம் சேனையின் 80வது ஆண்டு நிறைவு விழாவை 16.09.2001 அன்று அடைக்கலநாயகி ஆலயத்தில் கொண்டாடியது. அத் தருணத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்கள் தமது உரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் ஒருகாலத்தில் 60ற்கு மேற்பட்ட பிரசீடியங்கள் இயங்கிவந்த யாழ். மறை மாவட்டத்தில் தற்போது 21 பிரசீடியங்களே செயற்படுகின்றன என்றும் வன்னிப் பிரதேசத்தில் கஸ்ர நிலைமைகள் காரணமாக 4 பிரசீடியங்களே உள்ளன என்றும் கூறினார். குறிப்பாக இளைஞர் பிரசீடியங்களை அமைக்க வேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

காலை 10மணிக்கு ஆன்ம இயக்குனர் அருள்திரு ஆர்.எச். சகாயம் அவர்களால் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் ஜெறோ மண்டபத்தில் கொமிற்சியத் தலைவர் எம்.ஏ. பிரகாசராஜா தலைமையில் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. ஆயரின் உரையைத் தொடர்ந்து பிரசீடியங்களின் நிகழ்ச்சிகளும் தேநீர் விருந்தும் இடம்பெற்றன. மார்ட்டினார் குருமட மாணவர்கள் அழைத்தல் பற்றிய ஒரு தெருக்கூத்தையும் நிகழ்த்தினர்.

# அருள்திரு கிறகோரி டொணேசன் வாகன விபத்தில் பலி

### திருமலை மறைமாவட்டம் சோகத்தில்



திருகோணமலை புனித மரியாள் பேராலய உதவிப் பங்குத்தந்தையான அருள் திருகிறகோரி டொணேசன் மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருக்கையில் 30.08.2001இல்வாகன விபத்தில் சிக்கி, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் 04.09.2001இல் காலமானார்.

அருள்தந்தையின் மறைவினால் திருகோணமலை மறை மாவட்டம் சோகத்தில் மூழ்கியது. பேராலயத்தைச் சூழவுள்ள பகுதியெங்கும் கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

அருள்தந்தையின் இறுதி இரங்கல் நிகழ்வு 06.09.2001இல் திருமலை புனித மரியாள் பேராலயத்தில் இடம்பெற்றது. இதன்போது மட்டுநகர் – திருமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை திருப்பலியை நிறைவேற்றினார். தொடர்ந்து திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் இரங்கல் கூட்டம் இடம்பெற்றது. தொடர்ந்து அருள்தந்தையின் புகழுடல் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. இந் நிகழ்வுகளில் குருக்கள், துறவிகள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டார்கள்.

மட்டக்களப்பு வாகரையைச் சேர்ந்த கிறகோறி டொணேசன் அடிகளார் 21.09.1970இல் பிறந்தார். 24.07.2000இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். குருவாகி ஒரு வருட காலத்திலேயே இறைவனடி சேர்ந்துவிட்டார்.

## இறை இசைத்தென்றல்

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாடு மதுரைசார் இறையியல் பேராசிரியர் அருள்திரு மத்தியூ கருணாகரன் வழங்கிய 'இறை இசைத் தென்றல்' எனும் இசை நிகழ்ச்சி கடந்த 26.08.2001 ஞாயிறு மாலை 5.30 தொடக்கம் 7.00 மணி வரை குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

இதன்போது நிகழ்வின் ஆரம்ப உரையை ஜே.ஈ. ஜெயசீலன் அடிகளார் ஆற்றினார். குருநகர் பங்குத்தந்தை அ.ஜெயசேகரம் அடிகள் பங்குமக்கள் சார்பில் உரையாற்றினார். இதன்போது அவர் தமிழ் மக்கள் போராட்டம் தொடர்பாகவும், அவர்கள் அனுபவிக்கும் துன்ப, துயரங்கள் குறித்தும் இந்தப் போரில் குருநகர் பட்ட அவலங்கள் குறித்தும் விளக்கமாக குறிப்பிட்டு, தமிழ் மக்களின் பிரச்சினைகளை பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பதற்கு உதவுமாறு இந்திய அரசுக்கு நீங்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கருணாகரன் அடிகளாரிடம் கேட்டுக்கொண்டார். குருநகர் பங்கு மக்கள் சார்பில் நினைவுப் பரிசு ஒன்றும் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் ஜெபநேசன் அடிகளாரும் கலந்துகொண்டு உரையாற்றினார். பெருமளவு மக்கள் இவ் 'இறை இசைத்தென்றல்' நிகழ்வில் ஆர்வத்துடன் கலந்துகொண்டார்கள்.

இத்தகைய நிகழ்வு யாழ் குடாநாட்டில் பல பகுதிகளிலும் ஏற்கனவே நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நிக்கலஸ் வின்சர் பிரபு கத்தோலிக்கரானார்

எலிசபெத் மகாராணியின் ஒன்றுவிட்ட சகோதரராகிய கெனற் கோமகனது இளைய மகனாகிய நிக்கலஸ் வின்சர் பிரபு இங்கிலாந்து திருச்சபையிலிருந்து விலகி கத்தோலிக்க மதத்தைத் தழுவிக் கொண்டார். அவரது தாயார் 1994ல் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் அரசுரிமைக்கு 25வது வாரிசான இவர் இம் மத மாற்றத்தால் அந்த உரிமையை இழக்கின்றார். இங்கிலாந்து சட்டத்தின்படி கத்தோலிக்க மறையை தழுவினாலோ, கத்தோலிக்கரை மணம் செய்தாலோ ஒருவர் அரசுரிமைக்கு தகுதியற்றவராகி விடுகிறார்.

## மதத்தலை...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தலைவர்கள் முன்வந்து எமது சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டும். மக்கள் சக்தியே இறுதியில் தீய சக்திகளை அழிக்கும்'' என்றார். அருள்தந்தை நந்தன மனதுங்க பேசுகையில் எம் அனைவருக்கும் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ உரிமையுண்டு. பாடசாலையில் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு இல்லையென்றால் எமக்கு என்ன பாதுகாப்பு இருக்கின்றது? என்றார்.

இப் பத்திரிகை பாதுகாவலன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360 பிரதான வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 2001ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. P.197. T.P. No. 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org